801

# ஆரம்பக்கல்வி

## தமிழ்

801
4-49

நான்காம் வாசகம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 DEC 1949
MADRAS

TB
031(4)
N49
147078

...கா பப்ளிஷிங் ஹவுஸ்
...ன்னார்குடி

# ஆரம்பக் கல்வி

## தமிழ்

### நான்காம் வாசகம்

ஆக்கியோர் :
வித்துவான் வே. இலட்சுமணன்
என். எஸ். நடேசன்,
தலைமையாசிரியர், முனிசிபல் ஆரம்பப் பாடசாலை,
மன்னார்குடி.

ஸ்ரீ ஷண்முகா பப்ளிஷிங் ஹவுஸ்,
மன்னார்குடி.

பதிப்புரிமை] [விலை அணா 7½.

முதற் பதிப்பு —1949

147078

Printed at the Rajan Electric Press, Madras-1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 DEC 1949
MADRAS

# முகவுரை

'ஆரம்பக் கல்வி — தமிழ் வாசகம்' என்ற தலைப்பில் முதல் ஐந்து வகுப்புகளுக்கு அண்மையில் வெளியிடப் பட்ட பாடத் திட்டத்தை யொட்டி இப் புத்தகங்களை வெளி யிட்டிருக்கின்றோம். பாடத்திட்டத்தில் கண்டிருக்கும் ஒவ் வொரு குறிப்பும் இவ் வாசகங்களில் சிறப்புப் பெற்றுள் ளது.

குழந்தைகள் தக்க தாய் மொழிப் பயிற்சியும், உலகியல் அறிவும் ஒருங்கே பெற்றுக் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதே எமது குறிக்கோள்.

பாடங்கள் அந்தந்த வகுப்புக் கேற்றபடி, படிப்படி யான முறையில் பயிற்சிகளுடன் கொடுக்கப்பட்டிருக்கின் றன. தகுந்த நேர்த்தியான படங்களும் உற்சாகமூட்டக் கூடிய இனிய பாடல்களும், உரையாடல்கள், நாடகம் ஆகிய பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ் வாசகங்கள் ஆரம்ப வகுப்புக்களைக் கையாண்டு மாணவர்களின் படிப்பு வளர்ச்சி முறையை உணர்ந்த அனுபவத்துடன் தொகுக்கப்பட்டிருப்பதால் மாணவர் கள் இவைகளைப் படிப்பதன் மூலம் நிறைந்த அறிவு பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

இப்புத்தகம் நான்காம் வகுப்பிற்குரியது. மாணவர் கள் விரும்பிப் படிக்கும் வகையில் இதை வெளியிட்டிருக் கிறோம். மாணவர்கள் இவைகளைக் கற்று நற்பயன் அடை வார்களாக.

ஆக்கியோர்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழகம் | ... | 1 |
| 2. | செந்தமிழ் நாடு | ... | 7 |
| 3. | வாய்மொழிப் பழக்கம் | ... | 8 |
| 4. | உலோகங்கள் | ... | 9 |
| 5. | சுட்ட பழமா? சுடாத பழமா? | ... | 15 |
| 6. | ஆகாய விமானம் | ... | 21 |
| 7. | உள்ளதை இழந்த குள்ள நரி | ... | 26 |
| 8. | திருவள்ளுவர் | ... | 28 |
| 9. | திருக்குறள் | ... | 35 |
| 10. | சிமாசாரப் பத்திரிகை | ... | 56 |
| 11. | பத்திரிகைச் செய்தி | ... | 43 |
| 12. | ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை | | 45 |
| 13. | வழிப் போக்கனும் ஆலமரமும் | ... | 49 |
| 14. | கடிதங்கள் | ... | 51 |
| 15. | குடிசைக் கைத்தொழில்கள் | ... | 54 |
| 16. | ஆடு ராட்டே! | ... | 62 |
| 17. | சமயோசித புத்தி | ... | 64 |
| 18. | ஜவாஹர்லால் நேரு | ... | 69 |
| 19. | கிராமப் பஞ்சாயத்து | ... | 76 |
| 20. | கிராமப் பாட்டு | ... | 82 |
| 21. | தேசிங்கு மன்னன் | ... | 83 |
| 22. | சாலை விதிகள் | ... | 90 |
| 23. | சிங்கம் பேசுகிறது! | ... | 94 |
| 24. | பழமொழிகள் | ... | 99 |
| 25 | வீர சிவாஜி (நாடகம்) | ... | 100 |
| 26. | செய்யுட் பகுதி | ... | 111 |

# ஆரம்பக் கல்வி

# தமிழ்

## நான்காம் வாசகம்

### 1. தமிழகம்

| | | |
|---|---|---|
| வாழும் | குமரிமுனை | மதத்தினர் |
| தமிழகம் | வேறுபாடு | மூவேந்தர் |
| இனிமையான | பரப்பு | தெய்வபக்தி |
| பயன் | ஜில்லாக்கள் | நினைவூட்டுதல் |
| திருவேங்கடமலை | மூதாதையர் | ஆதரித்து |

நாம் வாழும் நாட்டிற்கு இந்தியா என்று பெயர். இந்தியாவின் தென்பகுதியில் நாம் வசிக்கிறோம். நாம் வசிக்கும் பகுதியைத் தமிழ்நாடு அல்லது தமிழகம் என்று சொல்வார்கள். தமிழகத்தில் வாழும் நாம் பேசும் மொழி தமிழ்மொழி யாகும்.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள். ஆகையால் தமிழ் ஒரு இனிமையான மொழி. பண்டைக் காலம் முதல் மிக்க பெருமையுடன் வழங்கி வரும் மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று.

இம்மொழியில் பல அருமையான நூல்கள் உள்ளன. நீங்கள் பெரியவர்கள் ஆனபின் அவைகளைப் படித்துப் பயன் அடையுங்கள்

தமிழ் நாட்டின் வடக்கெல்லை திருவேங்கட மலையாகும். தெற்கெல்லை கன்னியாகுமரியாகும். இப்பகுதிக்குள் அடங்கிய தமிழ்நாடு பன்னிரண்டு ஜில்லாக்களைக் கொண்டிருக்கிறது. அவை திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, நீலகிரி, கோயமுத்தூர், சேலம், தஞ்சை, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, சென்னை என்பனவாம்.

தமிழர்கள் மிக்க சீரும், சிறப்பும், நாகரிகமும், கல்வியறிவும் பெற்று விளங்குகிறார்கள். தமிழகத்தில் பல மதத்தினர்களும் வசிக்கிறார்கள். எனினும் அவர்கள் எல்லோரும் தமிழர்களே. ஆகையினால் தமிழர்கள் தம் நாட்டில் தம்முடன் வாழும் பிற மதத்தினரிடம் சகோதர அன்பு காட்டி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழகம் மிகவும் செழுமையானது. வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வைகை, தாமிரபருணி முதலிய

ஆறுகள் பாய்ந்து தமிழ் நாட்டை வளப் படுத்துகின்றன. நன்செய் நிலங்களில் நெற் பயிரும், புன்செய் நிலங்களில் சோளம், கேழ் வரகு, வேர்க்கடலே, துவரை முதலிய தானி யங்களும் ஏராளமாய்ப் பயிராகின்றன. இன் னும் தமிழகத்தில் கரும்பு, வாழை, தென்னே முதலியவைகளும் நன்கு வளர்கின்றன.

ஆதி காலத்தில் தமிழகம் மூன்று பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை சேர நாடு, சோழநாடு, பாண்டியநாடு எனப்படும். இவைகளே முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் அரசர்கள் ஆண்டு வந்தனர். இவர்களேத் தமிழ்நாட்டு மூவேந் தர்கள் எனக் கூறுவதுண்டு. இவர்கள் சிறந்த போர்வீரர்கள். இவர்கள் ஒவ்வொரு வரும் தமக்கென ஒரு கொடியை வைத்துக் கொண்டிருந்தனர். சேரர் வில்லேயும், சோழர் புலியையும், பாண்டியர் மீனேயும் தத்தம் கொடிகளின் அடையாளமாகக் கொண்டிருந்தனர்.

தமிழ் வேந்தர்கள் தெய்வபக்தி நிரம் பியவர்களாயிருந்தனர். ஆகையினுல் அவர் கள் தமிழ்நாட்டின் எல்லா இடங்களிலும் கோவில்களேக்கட்டிக் கடவுளே வழிபட்டனர்.

வானளாவிய கோபுரங்களைக் கோவிலைச் சுற்றி நாற்புறங்களிலும் எழுப்பினர். அவர்கள் கட்டிய கோவில்கள் இன்றும் அழியாது நிற்கின்றன. அவை நம் மூதாதையர்களின் பக்திச்சிறப்பையும் அறிவின் மேன்மையையும் இன்னும் நினைப்பூட்டி வருகின்றன.



தமிழ் அரசர்கள் தமிழை வளர்க்க அரும்பாடு பட்டனர். பாண்டிய நாட்டில் மும்முறை சங்கங்கள் தோன்றித் தமிழ் மொழியை வளர்த்தன. அவைகள் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்பனவாம். இச்சங்கங்களில் அரசர்களும் புலவர்களும் கூடித் தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றினார்கள்.

இளங்கோவடிகள், திருவள்ளுவர், ஔவையார், கம்பர், புகழேந்தி முதலிய சிறந்த புலவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்களே. அவர்கள் நாடெங்கும் பரவிச் சுவைதரும் பாடல்களைப் பாடி வந்தனர். அரசர்களும், வள்ளல்களும் அவர்களை ஆதரித்துப் போற்றினர்.

இவ்வளவு புகழ் நிறைந்த தமிழகத்தில் வாழும் நாம் ஒற்றுமையுடன் வாழ்வோமாக. தமிழகம் எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்க நாம் முயலுவோம். அதுவே நம் கடமையாகும்.

## கேள்விகள்

1. தமிழகம் இந்தியாவின் எப்பகுதியில் இருக்கிறது?
2. தமிழ் நாட்டின் வடக்கெல்லை யாது? தெற்கெல்லை யாது?
3. தமிழ் நாட்டில் அடங்கிய ஜில்லாக்கள் யாவை?
4. தமிழ் நாட்டு மூவேந்தர்கள் யாவர்? அவர்களின் கொடிகளுக்கு அடையாளங்கள் யாவை?
5. தமிழகத்தில் பாயும் நதிகள் யாவை?
6. முற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஐவர் பெயரைக் கூறு.

## பயிற்சி

1. பிரித்து எழுதுதல்: தமிழ்மொழியாகும் = தமிழ்+ மொழி +ஆகும்; முன்னணி = முன் + அணி; கூறுவதுண்டு=கூறுவது+உண்டு.

2. கீழ்க்காணும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது:— செழுமையான, சிறந்த, ஆட்சி, பகுதி.

## இலக்கணம்

1. தமிழ் சிறந்த மொழி. இது ஒரு வாக்கியம். 'தமிழ் சிறந்த' என்று சொன்னால் பொருள் விளங்காது. அவற்றின் பொருள் விளங்க மற்றொரு சொல் அதிகமாக வேண்டியிருக்கிறது. மொழி என்ற சொல்லைச் சேர்த்துப் படித்தால் பொருள் விளங்குகிறது. இவ்வாறு சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிந்த பொருளைத் தெரிவித்தால் அது ஒரு வாக்கியம் எனப்படும். வாக்கியத்தின் முடிவில் ஒரு முற்றுப் புள்ளி(.) வைக்கவேண்டும்.

2. இப்பாடத்தின் ஐந்தாவது பாராவிலுள்ள வாக்கியங்களை எண்ணி, அவை எவ்வளவு என்று கூறு.

## 2. செந்தமிழ் நாடு

| | | |
|---|---|---|
| செந்தமிழ் | மேனி | ஆரம் |
| இன்பம் | செழித்த | படைத்த |
| தேன் | பாரெங்கும் | அள்ளும் |
| பாயுது | வீசும் | மணம் |
| மேவிய | வான்புகழ் | புகழ் |

1. செந்தமிழ் நாடெனும்போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள்
(செந்தமிழ்)

2. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்ட தோர் வையை பொருநை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

3. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு. (செந்தமிழ்)

4. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

(பாரதியார்)

பயிற்சி

1. இப்பாடல்களை இசையுடன் மனப்பாடம் செய்யவும்.
2. இப் பாடல்களிலிருந்து நீ அறிந்து கொண்டதைப் பத்து வரிகளில் எழுது.

## 3. வாய் மொழிப் பழக்கம்

பொது அறிவு

மௌனமாகப் படித்துக் கீழ்க்கண்ட வினுக்க ளுக்கு விடைகள் எழுது. விடைகள் முழு வாக்கியங் களாக இருக்கவேண்டும்.

1. உன் பெயர் என்ன?
2. உன் பெற்ரேரின் பெயர் என்ன?
3. உனக்கு உடன் பிறந்தவர்கள் உண்டா? எவ்வளவு பேர்? ஆண் கள் எவ்வளவு? பெண்கள் எவ் வளவு?
4. நீ வசிக்கும் ஊர் எது? உன் னுடைய விலாசத்தை எழுது.
5. நீ படிக்கும் பாடசாலையின் பெயர் என்ன?
6. நீ எந்த வகுப்பில் படிக்கிருய்?
7. உன் பாடசாலையில் எத்தனை ஆசிரி யர்கள் இருக்கிருர்கள்? அவர்க ளின் பெயர் என்ன?
8. நீ தினமும் குறித்தநேரத்தில் பாட சாலைக்குச் செல்வதுண்டா?
9. நீ எப்பொழுதும் உண்மை பேசு கிருயா?
10. உங்கள் ஊரில் தெருக்களுக்கு விளக் குகள் போடுகிருர்களா?
11. உன் வீடு இருக்கும் தெரு சுத்தமா யிருக்கிறதா?
12. உன் ஊரின் ஜனத்தொகை என்ன?

———

## 4. உலோகங்கள்

| | | |
|---|---|---|
| உலோகம் | பொடியாக்கி | மென்மை |
| கலந்து | இரும்புக்குழம்பு | தகடு |
| சுரங்கம் | பாளம் | முலாம் |
| பாறை | உருக்கி | பசுமை |
| பளபளப்பு | களிம்பு | கம்பி |

உலோகங்கள் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. அவைகள் பூமியினுள் சில இடங்களில் மண், கல் முதலியவைகளுடன் கலந்திருக்கும். அவை வெட்டி எடுக்கப்படுமிடத்திற்குச் சுரங்கம் என்று பெயர்.

உலோகங்களில் பல வகைகள் உண்டு. பொன், வெள்ளி, இரும்பு, செம்பு ஈயம் இவ்வைந்தும் பஞ்ச உலோகங்கள் எனப்படும். தகரம் துத்தநாகம், அலுமினியம், நிக்கல் முதலியவையும் உலோகங்களே.

பொன் — இது அதிகப் பளபளப்புள்ளது. இதன் நிறம் மஞ்சள். இதைத் தங்கம் என்பதும் உண்டு. இது பூமியில் கிடைத்த போதிலும், மற்றவைகளைப் போல மண்ணுடன் கலந்து நிற்காது. பூமியின் உட்புறத்தில் பாறைகளுக்கு நடுவில் சிறு துகள்களாய்க் கிடைக்கும். இது பற்பல நகைகள் செய்யவும், நாணயங்கள் செய்ய

வும் உதவும். பொன் பிற உலோகங்களை விடக் கனமுடையது. உலோகங்களுள் உயர்ந்தது இதுவே. இதைத் தகடாக்கவும், கம்பியாய் இழுக்கவும் இயலும். நமது தேசத்தில் மைசூர் ராஜ்யத்தில் உள்ள கோலார் என்னுமிடத்தில் தங்கம் அகப் படுகிறது.

வெள்ளி :— இது சுத்தமான வெண்மை நிற முடையது. இது பளபளப்பாயிருக்கும். இதைத் தகடாக அடிக்கவும், கம்பி போல் இழுக்கவும் கூடும். இது அதிக உறுதியா யிருப்பதுடன் ஈயம், பொன் நீங்கலான மற்றவைகளைக் காட்டிலும் கனமுடையது. வெள்ளியினால் நாணயங்களைச் செய் கிறார்கள். இது பாத்திரங்கள் செய்யவும், முலாம் பூசவும் உபயோகப்படுகிறது. இது இரும்பு முதலிய உலோகங்களைப் போலவே பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. சிலவிடங்களில் தனியாகவும், வேறு சில இடங்களில் தாமிரம், ஈயம் முதலிய வைகளோடு கலந்தும் இது கிடைக்கும்.

இரும்பு :— இது உலோகங்கள் எல்லா வற்றிலும் மிக்க உறுதியும் உபயோகமு முடையது. இது பூமியில் மண், கல் முதலி யவைகளோடு கலந்திருக்கும். இதை

வெட்டி யெடுத்துக் கழுவிப் பொடியாக்கி, உலையிலிட்டு உருக்குவார்கள். அப்பொழுது அழுக்குகள் எல்லாம் மேல் வர, இரும்புக் குழம்பு அடியில் தங்கிவிடும். அவ்வாறு தங்கிய இரும்புக் குழம்பை மணலில் ஆற வைத்துக் கட்டி போலாக்குவார்கள். இதற்கு இரும்புப் பாளம் என்று பெயர்.

இரும்பு பற்பல இயந்திரங்கள், குழாய்கள், தூண்கள், ஆணிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள், தண்டவாளங்கள் முதலியன செய்ய உபயோகப் படுகின்றது.

செம்பு:—இது தாமிரம் என்று சொல்லப் படும். இது பளபளப்புள்ள ஒரு சிவந்த உலோகம். இதுவும் இரும்பைப் போலவே பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றது. சில இடங்களில் இது சுத்தமாகவே அகப் படும். இதை உருக்கிக் காய்ச்சினால் தட்டி நீட்டவும், அகலமாக்கவும், கம்பியாக்கவும் கூடும். செம்பினால் பற்பல பாத்திரங்கள் செய்யப் படுகின்றன. ஆனால் இது களிம்பு ஏறக்கூடியது. இந்த உலோகத்தை உருக்கி மற்ற உலோகங்களோடு கலந்து வெண்கலம் முதலியவைகளைச் செய்யலாம்.

ஈயம்:— இது மென்மையும் கனமும் உள்ளதோர் உலோகம். இதைச் சுலபமாய்

உருக்கவும், வளைக்கவும், ஒடிக்கவும் முடியும்; இதைக் கம்பிபோல நீட்ட முடியாது. தகடாக அடித்துப் பல பாத்திரங்களைச் செய்யலாம். இது பித்தளைப் பாத்திரங்களின் உள்ளே பூச உபயோகப்படுகிறது.

ஈயத்தை அண்டிமொனி என்னும் வேருேர் உலோகத்துடன் சேர்த்து அச்சு எழுத்து வார்ப்பார்கள். இதைப் பென்சில் செய்யவும் உபயோகிக்கிருர்கள். ஈயத்தினுல் செய்யப்படும் பாத்திரங்கள் களிம்பு பிடிக்காது. எந்தப் பண்டங்களையும் இதில் வைத்துக் கொள்ளலாம்.

**தகரம்:—** இது அதிக ஒளியும் வெண்மை நிறமும் உள்ளதோர் உலோகம். இதை உருக்கித் தகடாக அடிக்கலாம். இது உபயோகத்தில் இல்லாவிட்டால் துருவேறிக் கெட்டுவிடும்.

**துத்தநாகம் :—** இது பசுமையும், நீலமும் கலந்த ஒருவகை உலோகம் இதைத்தேய்த்தால் பளபளப்புண்டாகும். இது எல்லா உலோகங்களைக் காட்டிலும் இலேசானது. இதனுல் பலவகைக் குழாய்கள் செய்யலாம். இதைத் தகடுகளாக்கி வீட்டின் கூரைக்குப் போடலாம்.

**பித்தளை**:—இது தனிப்பட்ட உலோக மன்று. இது கலப்பு உலோகமாகும். தாமிரத்தோடு துத்தநாகத்தைச் சேர்த்தால் இது உண்டாகும். இதனுல் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

**வெண்கலம்** :— இதுவும் தனிப்பட்ட உலோகமில்லை. கலப்பு உலோகமே. தாமிரத்தோடு தகரத்தைச் சேர்த்தால் வெண்கலமாகும். சோறு ஆக்குவதற்கு வெண்கலப் பாத்திரங்களை உபயோகிக்கிருர்கள்.

### கேள்விகள்

1. உலோகங்கள் எங்கிருந்து வெட்டியெடுக்கப் படுகின்றன? வெட்டி எடுக்கப்படும் இடத்திற்கு என்ன பெயர்?
2. பஞ்ச உலோகங்கள் யாவை?
3. நமக்கு மிகவும் உபயோகமான உலோகம் எது?
4. விலையுயர்ந்த உலோகங்கள் எவை?
5. கலப்பு உலோகங்கள் இரண்டைக் கூறு.
6. பித்தளை எந்த இரண்டு உலோகங்கள் கலந்தது?
7. இரும்பினுல் செய்யப்படும் பொருள்களில் ஐந்தைக் கூறு.
8. மிகவும் இலேசான உலோகம் எது?

### பயிற்சி.

கோடிட்ட இடங்களில் பாடத்தில் வரும் சொற்களை அமைத்துப் பூர்த்தி செய்.

1. நமது இந்தியாவில் — ராஜ்யத்தில் உள்ள—— என்னுமிடத்தில்—— அகப்படுகிறது.

2. உலோகங்கள்—— வெட்டி யெடுக்கப் படுகின்றன. அவை வெட்டி யெடுக்கப்படுமிடத்திற்குச்—— என்று பெயர்.

### இலக்கணம்

1. பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் இவ்வைந்தும் பஞ்ச உலோகங்கள் எனப்படும். இவ்வாக்கியத்தில் உலோகத்தின் பெயருக்குப் பக்கத்திலுள்ள அடையாளத்தைக் கவனி. இது கால் புள்ளி (,) எனப்படும். இக்குறியிட்ட இடங்களில் சற்றே நிறுத்திப் படிக்க வேண்டும்.

2. பின் வரும் வாக்கியங்களில் கால் புள்ளி வைத்து எழுது.

   1. நான் கடைக்குச் சென்று புத்தகம் சிலேட்டு பென்சில் ரப்பர் முதலியன வாங்கினேன்.

   2. ஆசிரியர் கணக்கு தமிழ் சரித்திரம் பூகோளம் சுகாதாரம் முதலிய பாடங்களைக் கற்பித்தார்.

———

## 5. சுட்ட பழமா? சுடாத பழமா?

| | | |
|---|---|---|
| கேள்வி | பழுத்திருந்தன | வியப்பு |
| மிகுதியாக | விருப்பம் | அளித்தது |
| ஏராளமான | அண்ணுந்து | புலமை |
| நாவல் மரம் | பறித்து | விளங்கவில்லை |
| செம்பழம் | ஏளனமாக | கனிவு |

(இக்கதையை மௌனமாகப் படித்துப் பின் நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையை முடியுங்கள்.)

மாணவர்களே! ஔவையாரைப் பற்றி நீங்கள் கீழ் வகுப்பில் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அவர் கல்வி கேள்விகளில் சிறந் தவர் என்று எல்லோராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். அவருடைய வாழ்க்கை மிகவும் மேலானது. அதை விவரிக்கும் கதைகள் ஏராளமாக உள்ளன. அவைகளுள் ஒன்றையே இங்கு நீங்கள் படிக்கப்போகி றீர்கள்.

ஔவையார் ஒரு சமயம் ஒரு சாலையின் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கே ஓரிடத்தில் ஏராளமான நாவல் மரங்கள் இருந்தன. அம் மரங்களில் பழங்கள் மிகுதி யாகப் பழுத்திருந்தன. நாவல் பழங்களைக் கண்ட ஔவையார், அவைகளைத் தின்ன விருப்பங் கொண்டார்.

மரங்களில் பழுத்துத் தொங்கும் பழங்களை எப்படிப் பறிப்பது? ஔவையாரால் மரத்தின் மீது ஏற முடியுமா? அவர் யாது செய்வதென்று சிறிது நேரம் யோசித்தபடியே நின்றார். அப்பொழுது அவர் பார்வை ஒரு மரத்தின் மேல் சென்றது.

அம் மரத்தின் உச்சிக்கிளையில் ஒரு சிறுவன் உட்கார்ந்து, பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருந்தான். ஔவையார் அச் சிறுவனைப் பார்த்து, "குழந்தாய், 'எனக்குச் சில பழங்களைப் பறித்துப் போடு" என்று சொன்னார்.

அச் சிறுவன் "பாட்டி! உனக்குச் சுட்ட பழங்கள் வேண்டுமா? சுடாத பழங்கள் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையாருக்கு அச்சிறுவனின் கேள்வி வியப்பையளித்தது. "பழங்களில் சுட்ட பழங்கள், சுடாத பழங்கள் என உண்டோ?" என்று அவர் ஐயப்பட்டார். பலவாறு யோசித்தும், அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. மிகப் புலமை வாய்ந்தவராயிருந்தும் ஔவையார் அச் சிறுவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் திகைத்தார்.

கடைசியாக ஔவையார் அச் சிறுவனைப் பார்த்து, "சுடாத பழங்கள் சிலவற்

றைப் பறித்துப் போடு" என்று சொன்னார். அச்சிறுவன் சில பழங்களைப் பறித்துக் கீழே போட்டான். அவைகளோ நன்றாகப் பழுக்



காத பழங்களேயாகும். அவை ருசியில்லாதவையாதலால் தின்பதற்குத் தகுதியற்றவை. நன்றாகப் பழுத்துக் கனிந்த பழங்களே தின்பதற்கு ருசியாயிருக்கும் அல்லவா?

தின்பதற்குத் தகுதியற்ற இவை எப்படி 'சுடாத பழ'மாகும் என்று ஔவையார் தமக்குள் யோசித்தார். மறுபடியும் பையனைப் பார்த்து, "இப்பொழுது எனக்குச் சுட்ட பழம் வேண்டும்" என்றார். அச் சிறுவனும் சில பழுத்த பழங்களைப் பறித்துக் கீழே மணலில் விழும்படி எறிந்தான். அவை மிகவும்

பழுத்துக் கனிந்திருந்ததால் கீழே விழுந்ததும் அவைமேல் மணல் ஒட்டிக்கொண்டது. ஔவையார் பழங்களையெடுத்து மணல்போக அவைகளை ஊதினார். உடனே சிறுவன் ஔவையாரைப் பார்த்து "பாட்டி! பழம் மிகவும் சுடுகின்றதோ? பார்த்து ஊது, கை சுடப்போகிறது" என்று வேடிக்கையாகவும், ஏதோ ஒரு பொருளை உள்ளடக்கியும் சொன்னான்.

ஔவையாருக்குச் சிறுவன் செய்த வேடிக்கை அப்பொழுதுதான் விளங்கியது. சுடுகின்ற பொருளை ஊதுவது போலப் பழத்தை ஊதவேண்டியிருந்ததால், பையன் அதைச் சுட்டபழம் என்று சொல்லியதைத் தெரிந்து கொண்டார். இச் சிறுவிஷயம் கல்வியிற் சிறந்த தமக்குத் தெரியாமல் போய் விட்டதே என்று எண்ணி வருந்தினார்.

மரத்திலிருந்த சிறுவன் கீழே இறங்கி வந்து ஔவையார் முன் நின்றான். அப்பொழுது அவன் உருவம் மாறியிருந்தது! ஔவையார் ஆச்சரியத்தில் மூழ்கித் தன் கைகளைக் கூப்பினார். அப்பொழுது அவன் "ஔவையே வருந்காதே. சிறுவனாக வந்தது நான் தான். உன்னிடம் விளையாட்டாகப் பேசவே இவ்வுருவுடன் வந்தேன்" என்று சொல்லிச் சிரித்தவாறு நின்றான்.

சிறுவனாக வந்தது முருகக் கடவுள் தான் என்பதை அறிந்ததும் ஔவையார் மிகவும் ஆனந்தம் கொண்டார். அப்பொழுது அவர் முருகக் கடவுளை வணங்கி அருமையான பாடல்களைப் பாடினார். முருகவேளும் அப் பாட்டுக்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து பின் மறைந்தார்.

பிள்ளைகளே! கல்வியிற் சிறந்த ஔவையாருக்கே சிறுவன் கூறிய வார்த்தையின் பொருள் புரியாமற் போனபொழுது, சாதாரணமானவர்கள் என்ன செய்வது? ஆகவே எல்லாவற்றையும் கற்று விட்டோம் என்று நாம் பெருமிதம் கொள்ளக்கூடாது.

### கேள்விகள்

1. ஔவையாரைப்பற்றித் தெரிந்ததை எழுது.
2. ஔவையார் சிறுவனை என்ன கேட்டார்?
3. சிறுவன் ஔவையாரிடம் என்ன கூறினான்?
4. ஔவையார் பழத்தை ஏன் ஊதினார்?
5. 'சுட்டபழம்' என்பதன் பொருள் யாது?
6. சிறுவனாக வந்தது யார்?
7. இந்தக் கதையினால் நீ அறியும் நீதி யாது?

### பயிற்சி

1. கீழ்க்காணும் பதங்களை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகித்து எழுது:— விருப்பம், வியப்பு, ஏளனம், கனிந்த.
2. சிறுவன், "பாட்டி! உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா?" என்று கேட்டான். இவ் வாக்கியத்தைக்

கவனிக்கவும். சிறுவன் கூறியதை அவன் கூறுவது போலவே எழுதும் பாகத்தை (“ ”) என்ற அடையாளங்களுக்குள் எழுதவேண்டும். இக்குறிகளுக்கு மேற்கோள் குறிகள் என்று பெயர்.

1. கீழ்க்கண்ட வாக்கியங்களில் தக்க இடங்களில் மேற்கோள் போட்டு எழுது.
2. ஒளவையார் எனக்குச் சுட்ட பழம் வேண்டுமென்று கேட்டார்.
3. நான் முருகக் கடவுள். வருந்தாதே என்று சொன்ஞர்.
4. கண்ணன் வேலனைப்பார்த்து, என் மாமா ஊரிலிருந்து வந்திருக்கிருர் என்று சொன்ஞன்.

இலக்கணம்

1. பெயர்ச்சொல் என்பது ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லாகும். வினைச் சொல் என்பது ஒரு செயலைக் குறிக்கும் சொல்லாகும்.
2. இப்பாடத்தில்வரும் பெயர்ச்சொற்களில் ஐந்தும், வினைச்சொற்களில் ஐந்தும் பொறுக்கி எழுது.



## 6. ஆகாய விமானம்

| | | |
|---|---|---|
| பல்லக்கு | ஜலவாயு | மார்க்கம் |
| நடுத்தரம் | பிரயாணம் | இயந்திரங்கள் |
| சவாரி | துரிதம் | கண் கூடாக |
| விஞ்ஞானி | காவியம் | இராமாயணம் |
| கீராவி | முனிவர் | புஷ்பகவிமானம் |

சிறுவர்களே! நாம் ஓரிடத்திலிருந்து வெகுதூரமான இடங்களுக்குப்போகவேண்டுமானுல் வாகனங்களை உபயோகிக்கிறோம் அல்லவா! முன் காலத்தில் உலகில் வாழ்ந்த மக்கள் பிரயாணம் செய்வதற்குப் பல்லக்குகளையே உபயோகித்தனர். பல்லக்குகளை

மனிதரே தூக்கிச் செல்ல வேண்டியிருந் ததால் இவை வெகு சிலருக்கே கிட்டக்கூடி யனவாயிருந்தன. ஆகையினுல் வேறு சிலர் குதிரை, ஒட்டகம் முதலிய பிராணி களின் மேல்ஏறிச் சவாரி செய்வது வழக்கமா யிருந்தது.

பிற்காலங்களில், மாடு, குதிரை போன்ற வைகளை வண்டியில் பூட்டி ஓட்டிச் செல் வது வழக்கத்திற்கு வந்தது. பின்னர் துவிச்சக்கர வண்டியும் ஏற்படலாயிற்று. நீராவியினுல் ஓடும் புகைவண்டியும் தலைப் பட்டது. அதனுடன் மோட்டார் வண்டி களும், கடலில் செல்லக் கூடிய நீராவிக் கப் பல்களும் ஏற்பட்டன.

இவ்வாறே சமீப காலத்தில் ஆகாய மார்க்கமாய்ச் செல்ல ஆகாய விமானமும் ஏற்பட்டிருக்கிறது.

இவ் விமானம் கண்டு பிடிக்கப்படுவ தற்கு முன், ஜலவாயுவைக் கொண்டு ஆகா யத்தில் பறக்கக் கூடிய ஆகாயக் கூண்டு களை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். அவர்கள் அக்கூண்டிலேறிப் போகத் தேர்ச்சியும் அடைந்தார்கள். ஆனல் அக் கூண்டுகள் காற்று அடிக்கும் திசையில் தான் செல்லக் கூடியனவாயிருந்தன. தவிர வும் சில சமயங்களில் அவற்றில் நிரப்பப்

படும் ஜலவாயு குறைந்து போய்ப் பூமியில் விழுவதும் உண்டு. ஆதலால் இக் கூண்டுகள் வேடிக்கையாகச் சிறிது தூரம் செல்லுவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட்டு வந்தன.

ஆனால், தற்காலத்தில் நீண்ட தூரம் பிரயாணம் செய்வதற்குத் தகுந்த வசதிகளுடன் ஆகாய விமானங்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன.

ஆகாய விமானத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர் செப்ளின் என்பவரே. இவருக்குப்பிறகே பல அறிஞர்கள் புதிதுபுதிதாகப் பற்பல விமானங்களைக் கட்டலானார்கள்.



பறவைகளுக்குச் சிறகுகள் இருப்பது போல் ஆகாய விமானத்திற்கு இரண்டு பக்கங்களிலும் நீண்ட இலேசான தகடுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பறவையின் வால் போல் ஒரு துடுப்பும் பொருத்தப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு வேண்டிய பக்கத்தில் விமானத்தைத் திருப்ப முடியும்.

இவற்றின் முன் புறத்தில் விசிறி போன்ற தகடுகள் வெகு வேகமாய்ச் சுழலுமாறு பொருத்தப் பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டிகளுக்கு அமைந்திருப்பது போன்ற இவ் விசிறிகள் வேகமாகச் சுழன்று விமானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களை ஓடச் செய்கின்றன.

புகைவண்டி, மோட்டார் வண்டி முதலியவற்றை விட விமானங்கள் வேகமாய்ச் செல்லக் கூடியவை. பிரயாணமும், தபால் போக்கு வரத்தும் விரைவாக நடைபெறுவதற்கு ஆகாய விமானமே தற்காலம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கும் மிகக் குறுகிய காலத்திற்குள் சென்று விடக்கூடியது ஆகாய விமானம் ஒன்றே.

ஆதிகாலத்தில் மனிதர்கள் ஆகாயவழியாய்ப் பிரயாணம் செய்தார்களென்று நம் நாட்டின் பழைய நூல்களில் கூறப்படுகின்றது.

முனிவர்கள் ஆகாய மார்க்கமாய்ச் சென்றனர் என்று காவியங்கள் கூறுகின்றன. புஷ்பக விமானம் என்பது விரும்பிய இடத்திற்குப் போகக் கூடியதென்று இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவற்றை

031(4) N49



• யெல்லாம் இப்பொழுது நாம் கண் கூடாகப் பார்க்கிறோமல்லவா?

ஆகாய விமானத்தை நீ நேரில் பார்க்க வேண்டியது மிக அவசியமாகும். நீ எப்பொழுதாவது சென்னைக்குச் சென்றால் அங்கே அதைப்பார்.

### கேள்விகள்

1. பழைய காலத்தில் இருந்த பிரயாண வசதிகள் யாவை?
2. ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
3. அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?
4. இராமாயணத்தில் கூறப்படும் விமானத்தின் பெயர் என்ன?

### பயிற்சி

1. கீழ்க்கண்ட பதங்களை வாக்கியங்களில் பொருத்தி எழுது. வேகமாக, பிரயாணம் ஆகாயம், போக்கு வரத்து, தகுதியான, கண்டு பிடித்தவர்.
2. எதிர்ப்பதங்கள் கூறு. விரைவாக, இலேசான, குறுகிய.

### இலக்கணம்

1. கீழே காணப்படும் வாக்கியங்களுக்கு முற்றுப் புள்ளிகளை வைக்க வேண்டிய இடங்களில் அமை. மனிதர் இழுக்கும் வண்டிகளும், துவிச் சக்கர வண்டிகளும் ஏற்படலாயின பின்னர் நீராவியினால் ஓடும் புகை வண்டிகளும் கடலில் செல்லக்கூடிய கப்பல்களும் தலைப்பட்டன
2. கீழ்க்கண்ட பதங்களைப் பெயர்ச் சொல் வேறாக வும் வினைச் சொல் வேறாகவும் பிரித்து எழுது.

| | |
|---|---|
| குதிரை | செல்லுகிறது. |
| கப்பல் | ஓடியது |
| செப்ளின் | தலைப்பட்டது. |
| வண்டி | அமைந்திருக்கிறது |

147078



## 7. உள்ளதை இழந்த குள்ளநரி

(நாட்டுப் பாடல்)

| | | |
|---|---|---|
| உள்ளது | மாட்டிறைச்சி | சார்ந்து |
| இழந்து | இலக்கு | கரையோரம் |
| மந்தை | தாவி | வகையாக |
| இன்சுவை | கானகம் | இடுக்கி |

உள்ளதையும் இழந்து ஓடோடிப் போனதொரு
குள்ள நரிக்கதையை கூறிடுவேன் கேட்டிடுவாய்.

மந்தை வழிதனிலே மாட்டிறைச்சி தான் கிடக்கத்
தந்திரமாய்க் குள்ள நரி தாவியதைத் தான் கவ்வித்

தண்ணீர்க் கரையோரம் சார்ந்திருந்த தப்போது
தண்ணீரிலேயிருந்து தலைதூக்கி வராலொன்று

இன்பமாய் வாய்திறந்து இலக்குப் பார்த்திருக்க
இதையந்த நரிகண்டு எனக்கிந்த வாளைமீனே
இன்சுவை உணவாகும் இதைப்பிடித் துண்பேன் என்று
தன்வாயிற் கறிதன்னைத் தரையினிலே போட்டுவிட்டு
வாளையைத் தாவியுமே வகையாகப் பிடித்திடவே
வாளேயோ தான்தப்பி வைகையில் வீழ்ந்ததுவே.
மேலிருந்த பருந்தொன்று மாட்டிறைச் சியைக்கண்டு
காலில்தான் இடுக்கியுமே கானகம் போனதுகாண்
திரும்பிவந்த நரியின் முன்னே சிறிதளவும் உணவில்லை
விரும்பிய வாளைதானும் வீணாகப் போன தோடு
"கையிலே கிடைத்த அந்தக்கறியையும் இழந்து விட்டேன்
ஐயகோ! ஏமாந்தேன்" என அலறித்தான் சென்றதுவே!

பயிற்சி

1. இந்தப் பாட்டின் கதையைச் சொல்லு.

2. இதே மாதிரி உனக்குத் தெரிந்த கதை ஒன்று எழுது.



## 8. திருவள்ளுவர்

| | | |
|---|---|---|
| நீதிகள் | இயற்றியவர் | பணிவிடைகள் |
| உருவச்சிலை | மனை | இயல்பு |
| கற்பித்தல் | சித்தர் | அமுது |
| மதத்தினர் | நற்குணம் | ஆவி |
| போதித்தல் | மங்கை | புழக்கடை |

தமிழ் மொழியில் நீதிகளைக் கற்பிக்கும் நூல்கள் பல வுள்ளன. அவைகளில் மிகச் சிறந்தது திருக்குறளேயாகும். குறட்செய்யுள் குறுகிய இரண்டடியால் ஆனது; ஆகையால் இது 'குறள்' என்று கூறப்படுகிறது. திரு என்பது அடைமொழி. திருக்குறள்

என்ருல் உயர்ந்த நீதிகளைக் கூறும் நூல் என்பதே பொருளாகும். இந்நூலை அக்காலத்தில் வாழ்ந்த சங்கப் புலவர்களே புகழ்ந்து பாடியிருக்கிருர்கள். இந்த நூல் இரண்டு அடிகளுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது செய்யுட்களைக் கொண்டதாகும். திருக்குறள் எல்லா மதத்தினருக்கும் பொதுவான நீதிகளைப் போதிப்பதால் இதைப் பொது மறை என்றும் சொல்லுவார்கள். முதன் முதலில் தமிழ் மொழியில் வெளியான உயர்ந்த நீதி நூல் இதுவே. ஆதலின், தமிழ் மறை என்று இந்நூல் கொண்டாடப் படுகிறது. இந் நூலின் சிறப்பையறிந்து பலமொழிகளிலும் இதை வெளியிட்டிருக்கிருர்கள். நீங்கள் இந்நூலைப் படித்துப்பயன் பெறவேண்டும்.

இவ்விதச் சிறப்பு வாய்ந்த நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்னும் புலவரே யாவார். திருவள்ளுவருடைய தாயின் பெயர் ஆதி. தந்தையின் பெயர் பகவன். ஔவையார், கபிலர் முதலியவர்கள் இவருடைய உடன் பிறந்தவர்கள் எனச் சொல்லப்படுகிருர்கள். இவருடைய பெற்ருேர்கள், தாங்கள் பெற்ற பிள்ளை ஒவ்வொருவரையும் பிறந்தவுடனே அவ்வவ்விடத்தில் விட்டுச்

சென்றனர். திருவள்ளுவரும் அவ்வாறு விடப்பட்டவரேயாவர். இவ்விதம் குழந்தையில் தனியாக விடப்பட்ட திருவள்ளுவரை, ஒருவர் கண்டெடுத்துத் தம் மனையில் வளர்த்து வந்தார்.

திருவள்ளுவர் இளமையிலேயே தமிழ் நூல்களைக் கற்று பெரும் புலவரானார். பல நீதி நூல்களைக் கற்றுத் தேர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்திருந்த அவரைத் "தெய்வப் புலவர்" என எல்லோரும் கொண்டாடினார்கள். அவர் சித்தர்கள் வசிக்கும் மலைச் சாரல்களுக்குச் சென்று தவ நிலையிலும் சிறிதுகாலம் வாழ்க்கை நடத்தினார்.

பின்பு, திருவள்ளுவர் தக்க வயது அடைந்ததும், **வாசுகி** என்ற நற்குணம் நிறைந்த நங்கையைத் திருமணம் செய்து கொண்டார். அந்த அம்மையார் தமது கணவரையே தெய்வமாகக் கொண்டு அவருக்குப் பணிவிடைகள் செய்து வந்தார். அவர் தம் கணவர் சொல்லுக்கு மாறாக எதையும் சொல்லார். அவர் கணவருடைய குறிப்பறிந்து அதற்கு ஏற்றபடி நடந்து வரும் இயல்புடையவர். அவருடைய கற்பின் பெருமையை விளக்கும் சில கதைகள் வழங்கிவருகின்றன.

ஒரு நாள் திருவள்ளுவர் உண்ணும் போது, வாசுகியார் அவர் இலையில் பழைய அமுதைப் படைத்தார். திருவள்ளுவர் தம் மனைவியைச் சோதிக்க எண்ணி, "சோறு சுடுகிறது, விசிறியை எடுத்து வா" என்றார். மறுமொழி சொல்லாமல் வாசுகி விசிறியுடன் வந்து, இலையில் வைக்கப்பட்ட பழைய அமுதை விசிறினார். அப்பொழுது அந்தப் பழைய சோற்றிலிருந்து ஆவி கிளம்பியது.

மற்றொரு நாள் வாசுகியம்மையார் தோட்டத்திலுள்ள கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் வள்ளுவர் தம் மனைவியை அவசரமாக அழைக்கவே, வாசுகி கையிலிருந்த கயிற்றை அப்படியே நழுவ விட்டுக் கணவரிடம் சென்றார். என்ன ஆச்சரியம்! வாசுகி தம் கணவன் இட்ட பணியைச் செய்து திரும்பும் வரையில் குடம் கிணற்றுக்குள் விழாமல், கயிறு அவர் விட்டு விட்டுப் போன நிலையிலேயே அந்தரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. உண்மையில் இச்செயல்கள் இரண்டும் அம்மையாரின் உயர்ந்த குணத்தையும், அதன் நன்மையையும் தெளிவாக்குகின்றன அல்லவா?

திருவள்ளுவர் நெசவுத் தொழில் செய்து தம் பிழைப்பை நடத்திவந்தார். அக் காலத்தில் **ஏலேல சிங்கர்** என்ற ஒரு நூல் வியாபாரி இருந்தார். அவர் வர்த்தகம் செய்து மிகுந்த பொருள் ஈட்டியிருந்தார். திருவள்ளுவர் அவரிடத்தில்தான் தம் தொழிலுக்கு வேண்டிய நூல்களை வாங்குவார். அதனால் இவர்கள் இருவருக்கும் நட்பு அதிகமாகியிருந்தது. ஏலேல சிங்கர் திருவள்ளுவரின் கல்வித் திறமையை அறிந்து அவரிடம் தாமும் கல்வி பயில விரும்பினர்; தமக்கு அவரை ஆசிரியராகவும் கொண்டார். ஏலேல சிங்கரைப் போன்ற வேறு பலரும் திருவள்ளுவரிடம் பாடங் கேட்டு வந்தனர்.

அவர்கள் ஒரு நீதி நூலை இயற்றியருளும்படித் திருவள்ளுவரை வேண்டினர்கள். அவர்களது வேண்டுகோளின்படி, திருவள்ளுவர் **திருக்குறள்** என்ற நூலை இயற்றினர். அந்நூல் தான் இன்றும் தலை சிறந்து விளங்கி நமக்கு நீதி புகட்டுகிறது.

திருவள்ளுவருக்கு, **செந்நாப்போதார்**, **நாயனர்**, **தெய்வப்புலவர்** என்ற வேறு பல பெயர்களும் உண்டு. இவர் வசித்த இடமாகிய மயிலாப்பூரில் இவருக்கு ஒரு கோயில்

கட்டப் பட்டிருக்கிறது. அக் கோயிலில் இவருடைய திருவுருவச் சிலையை இன்றும் காணலாம்.

### கேள்விகள்

1. திருவள்ளுவரின் பெற்றோர் யாவர்?
2. அவருடைய மனைவியார் பெயர் யாது? அவருடைய குணங்கள் யாவை?
3. திருவள்ளுவர் இயற்றிய நூலின் பெயர் என்ன? அதற்கு ஏன் அப் பெயர் அமைந்தது? அதன் பெருமையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
4. திருவள்ளுவருடைய வேறு பெயர்கள் யாவை?
5. ஏலேல சிங்கர் என்பவர் யார்?
6. வாசுகி அம்மையாரின் கற்புச் சிறப்பைக் கூறும் கதைகளுள் ஒன்றை எழுது.

### பயிற்சி

1. சேர்த்து எழுதுதல் :— பாடி+இருக்கிறார்கள் = பாடியிருக்கிறார்கள். குறிப்பு+அறிந்து = குறிப்பறிந்து. திரு+உருவம்+சிலை = திருவுருவச்சிலை.
2. எதிர்ப்பதங்கள் கூறு:—நற்குணம், புகழ்ந்து, பழைய.

### இலக்கணம்

3. ஒரு வாக்கியத்தின் முக்கியமான பகுதிகள் எழுவாயும், பயனிலையும் ஆகும். சில வாக்கியங்களுக்குச் செயப்படு பொருள் இருக்கும். வேறு சில வாக்கியங்களுக்கு இருக்காது.

திருவள்ளுவர் இயற்றினார்: இது ஒரு வாக்கியம். இயற்றினார் என்னும் சொல்லில் இந்த வாக்கியம் முடிவடைகிறது.

இச் சொல் இல்லாவிட்டால் வாக்கியம் முடிவுபெறுது. பொருள் முடிவு பெற்றிருக்கு மிடத்திற்குப் பயனிலை என்று பெயர்; பயன் = பொருள்; நிலை = நிற்குமிடம்; பயன் + நிலை = பயனிலை. ஆகவே இந்த வாக்கியத்தில் இயற்றினுர் என்னும் சொல் பயனிலையாகும்.

'இயற்றினுர்' என்ருல், யார் இயற்றினுர்? திருவள்ளுவர் இயற்றினுர். திருவள்ளுவர் என்னும் சொல் இல்லாவிட்டால் 'இயற்றினுர்' என்ற சொல் எவ்வாறு வரும்? ஆதலால் இயற்றினுர் என்ற சொல்லுக்குத் திருவள்ளுவர் என்ற சொல் முதல் நிலை ஆகும். அதாவது அந்தத் தொழிலைச் செய்பவர் பெயர் ஆகும். முதல் நிலைக்கு எழுவாய் என்று பெயர். எழு = தொழில் உண்டாகின்ற; வாய் = இடம்; எழுவாய் = தொழில் உண்டாகின்ற இடம். ஆகையால் இந்த வாக்கியத்தில் திருவள்ளுவர் எழுவாய்.

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினுர். இந்த வாக்கியத்தில் 'இயற்றினுர்' பயனிலை. 'திருவள்ளுவர்' எழுவாய். திருவள்ளுவர் எதை இயற்றினுர்? திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினுர். அதனுல் திருக்குறளை என்னும் சொல் செயப்படுபொருள். செயப்படு பொருள் என்பது எழுவாய் செய்யும் தொழிலின் பலனை அடையும் பொருள்.

முதல் வாக்கியத்தில் எழுவாய், பயனிலை இரண்டு மட்டும் இருக்கின்றன. இரண்டாம் வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இருக்கின்றன. இதனுல் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? எல்லா வாக்கியங்களிலும் எழுவாயும், பயனிலையும் இருக்கவேண்டும். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இருக்கும். சில வாக்கியங்களில் இருக்காது.

—




## 9. திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(கருத்து) எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதே போல உலக முழுவதும் கடவுளை முதலாக உடையது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

2. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

(கருத்து) ஒருவர் செய்த உபகாரத்தை நாம் மறக்கக் கூடாது. அபகாரத்தை அப்பொழுதே மறந்து விடவேண்டும்.

3. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

(கருத்து) சொல்லுவது சுலபம்; ஆனால் செய்வது கடினம்.

4. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்.

(கருத்து) தீமை செய்தவருக்கும் அவர் வெட்கித் திருந்தும்படி நன்மையையே செய்ய வேண்டும்.

## 10. சமாசாரப் பத்திரிகை.

(உரையாடல்)

| | | |
|---|---|---|
| பத்திரிகை | பூருபர் | பத்திராதிபர் |
| பிரசுரித்தல் | கருத்து | குறுகிய |
| வெளியிடுதல் | தலையங்கம் | சந்தாதாரர் |
| நிகழ்ச்சி | காரியாலயம் | தினசரி |
| திரட்டி | விரைவாக | செய்தித்தாள் |

**இராமன்**:— மாமா! கையில் எதையோ வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அது என்ன?

**மாமா**:— இராமா, இது சமாசாரப் பத்திரிகை. இதைச் செய்தித்தாள் என்றும் சொல்வார்கள். இதற்கு, 'சுதேசமித்திரன்' என்று பெயர்.

**இராமன்**:— மாமா! இதைத் தினந்தோறும் வாங்குகிறீர்களே, இது தினமும் வருகிறதா?

**மாமா**:— ஆம், தினந்தோறும் இது வெளியிடப்படுகிறது. இது ஒரு தினசரிப் பத்திரிகை.

**இராமன்**:— இது எங்கிருந்து வருகிறது?

**மாமா**:— இது சென்னையிலிருந்து வெளிவருகிறது. இந்தப் பத்திரிகையின் காரியாலயம் அங்கேதான் இருக்கிறது. இது ஒவ்வொருநாளும் மாலைவேளையிலேயே

சென்னையில் கிடைக்கும். அன்றே ரயிலில் அனுப்பப்பட்டு மறுநாள் இங்கு நமக்கு வருகிறது.

**இராமன்**:— நாம் பத்திரிகையை ஏன் படிக்க வேண்டும்? அதனால் என்ன நன்மை ஏற்படுகிறது?

**மாமா**:— நம் நாட்டின் பல பகுதிகளிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து இதில் வெளியிடுவார்கள். அயல் நாடுகளில் நடந்த நிகழ்ச்சிகளையும் திரட்டி, பத்திரிகையில் வெளியிடுவார்கள். வியாபாரச் செய்திகளையும், வியாபாரச் சரக்குகளின் விலைகளையும் தெரிவிப்பார்கள். நாம் அவற்றையெல்லாம் படித்தறிந்து பல நன்மைகளை அடையலாம். நமது அறிவும் வளரும்.

**இராமன்**:—பல இடங்களில் நடப்பவை பத்திரிகையாளருக்கு எவ்வாறு தெரியும்?

**மாமா**:— இதோ பார்! செய்திகளுக்கு முன் 'நமது நிருபர்' என்று குறிப்பிட்டிருக்கிறது. ஒவ்வொரு பெரிய ஊரிலும் ஒருவரை நிருபராக நியமித்திருப்பார்கள். அவர்களுக்கு மாதச் சம்பளம்

கொடுப்பார்கள். அவர்கள் ஆங்காங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் குறித்து அனுப்புவார்கள். அவசரமான செய்தி களாயிருந்தால் தந்தி மூலம் தெரிவிப் பார்கள். இம்மாதிரி ஒவ்வொரு பத்திரி கைக்கும் பல நிருபர்கள் இருப்பார்கள்.

**இராமன்** :—மாமா! இந்த ஒரே ஒரு பத்திரிகை தானு? அல்லது வேறு இதைப்போன்ற பத்திரிகைகளும் இருக்கின்றனவா ?

**மாமா** :—தினமணி, தினசரி, பாரததேவி என்று இன்னும் எவ்வளவோ இருக் கின்றன. இவைகள் யாவும் தினசரி வெளியிடப்படும் பத்திரிகைகள். வாரத் திற்கு ஒரு முறை வெளிவரும் வாரப் பத்திரிகைகளும், மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் மாதப் பத்திரிகை களும் இருக்கின்றன.

**இராமன்**:—இச் செய்திகளை யெல்லாம் தொகுத்து வெளியிடுபவர் யார்?

**மாமா**:— பத்திரிகை ஆசிரியர்தாம் செய்தி களைத் தொகுத்து வெளியிடுபவர். ஒவ் வொரு பத்திரிகைக்கும் ஆசிரியர், உதவி ஆசிரியர் இருப்பார்கள். அவர்கள் தின மும் தம்முடைய நிருபர்களிடமிருந்து தபாலில் அல்லது தந்தியில் வரும்

செய்திகளை எல்லாம் சேகரித்துப் பத்திரிகையில் வெளியிடுவார்கள். ஆசிரியர் செய்திகளை யெல்லாம் ஆராய்ந்து ஏதாவது ஒரு முக்கியமான செய்தியைப் பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார். அதை 'ஆசிரியர் பகுதி' என்று சொல்லுவது வழக்கம். பத்திரிகையில் அதுவே முக்கியமான பகுதியாகும்.

**இராமன்**:—பத்திரிகை வாங்கிப் படிப்பவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்! ஒவ்வொரு நாளும் அவ்வளவு பத்திரிகை அச்சடிக்க முடியுமா?

**மாமா**;—பத்திரிகை படிப்பவர்கள் ஆயிரக் கணக்காய் இருப்பார்கள். பத்திரிகைக் காரியாலயத்தில் நூற்றுக் கணக்கானவர் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு நாளும் செய்திகளை அச்சுக் கோர்த்து அச்சு யந்திரத்தில் விரைவாக அடித்து விடுவார்கள். சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட அச்சு யந்திரங்கள் ஒரு மணி நேரத்துக் குள்ளாகவே பல்லாயிரம் பிரதிகளை அச்சு அடிக்கின்றனவாம்.

**இராமன்**:—அப்படியானல் ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலத்துக்கும் ஒரு அச்சு யந்திரம் தேவை என்று சொல்லுங்கள்.



**மாமா**:—ஆம், அச்சு யந்திர மில்லா விட்டால் பத்திரிகைகளை அடிப்பது முடியாது.

**இராமன்**:—மாமா! பத்திரிகையைப் பற்றி எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டேன். எனக்கும் பத்திரிகை வாசிக்க ஆசையாயிருக்கிறது. ஆனல் எங்கள் ஊருக்குப் பத்திரிகை வருவதில்லையே.

**மாமா**:—ஆம்! உனது ஊர் சிறிய கிராம மாதலால் அங்கே பத்திரிகை விற்பவர்கள் இருக்க மாட்டார்கள். ஆனல் தபாலில் வரவழைக்கலாம். நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். உனக்கென்ன கவலை ?

இராமன்:—அது எப்படி மாமா? பத்திரிகைக்குப் பணம் யாரிடம் கொடுப்பது?

மாமா:—ஒரு வருஷம், அல்லது ஆறு மாதம் தினமும் பத்திரிகை கிடைப்பதற்காக, முன் கூட்டியே அதற்குரிய விலையைப் பத்திராதிபருக்கு அனுப்பினால் அவர் தபாலில் உனது விலாசத்துக்கு அனுப்பி விடுவார். தினமும் இம் மாதிரி எவ்வளவோ பேர்களுக்கு அவர் அனுப்புகிறார்.

இராமன்:—சரி மாமா. அப்படியே செய்து, எனக்கும் பத்திரிகை வரச் செய்யுங்கள்.

மாமா:—செய்கிறேன். சுதேச மித்திரனுக்கு இனி நீயும் ஒரு சந்தாதாரர் ஆகிவிடப் போகிறாய்.

இராமன்:—சந்தாதாரரா? அது என்ன மாமா?

மாமா:—பத்திரிகைக்குப் பணம் கட்டிப் பத்திரிகை வாசிப்பவர்களைச் சந்தாதாரர் என்று சொல்லுவார்கள். சரி, நீ போய் உன் வேலையைப் பார். நான் பத்திரிகை படிக்க வேண்டும்.

## கேள்விகள்

1. தினசரிப் பத்திரிகை யென்றால் என்ன?
2. பத்திரிகைக்கு நிருபர்கள் எதற்காக நியமிக்கப் படுகிறார்கள்?

3. பத்திரிகை ஆசிரியரின் வேலைகள் யாவை?
4. உனக்குத் தெரிந்த வாரப்பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் சிலவற்றின் பெயரை எழுது.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் சொற்கள் இடந் தவறி எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை வரிசைப்படுத்திச் சொல்லு.

1. வாசிக்க நானும் பத்திரிகை ஆசைப்படுகிறேன்.
2. ஒவ்வொரு பத்திரிகைக்கும் இருப்பார் ஓர் ஆசிரியர்

### இலக்கணம்

இராமன், பத்திரிகை, மன்னார்குடி, சென்னை இவை யாவும் பெயர்ச் சொற்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும். அவையாவன:—

1. பொருட் பெயர்:— இது ஒரு பொருளின் பெயராய் வருவதாகும். உ-ம். நாற்காலி, மேஜை, ஆசிரியர்.
2. இடப் பெயர் — ஓர் இடத்தின் பெயராய் வருவதாகும். உ-ம். சென்னை, பாடசாலை, அரண்மனை.
3. காலப் பெயர் — ஒரு காலத்தின் பெயராய் வருவதாகும். உ-ம். புதன், புரட்டாசி, பகல்.
4. சினைப் பெயர் — சினை என்றால் உறுப்பு அல்லது அவயவம் ஆகும். ஒரு உறுப்பின் பெயராய் வருவது சினைப் பெயராகும். உ-ம். காது, கண், கிளை.
5. குணப் பெயர் :— ஒரு குணத்தின் பெயராய் வருவதாகும். உ-ம். நன்மை, தீமை, வெண்மை.
6. தொழிற் பெயர்:— ஒரு தொழிலின் பெயராய் வருவதாகும். உ-ம். படித்தல், ஓடுதல், நடை.

———

## 11. பத்திரிகைச் செய்தி

"சுதேசமித்திரன்" என்ற தினசரிப் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மௌனமாகப் படித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை எழுது.

# உடல் ஒட்டியிருக்கும் இரட்டைச் சகோதரிகள்.

---

## 40 வருஷமாக உயிருடன் இருக்கும் அதிசயம்!

---

### தனியாகப் பிரித்தெடுக்க பெங்களூர் டாக்டரின் முயற்சி.

(நமது நிருபர்)

பெங்களூர், ஜூலை 2—

உடல்கள் இரண்டும் இடுப்பில் ஒட்டியபடிப் பிறந்த இரண்டு சகோதரிகள் இன்றைக்கும் பெங்களூரில் உயிரோடு இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு நாற்பது வயதாகிறது. ஒருத்தியின் பெயர் கங்கம்மா. மற்றவளின் பெயர் கௌரம்மா. இவர்கள் இருவரையும் ஆபரேஷன் செய்து பிரித்துவிட முடியுமா என்று பிரபல டாக்டர்கள் நால்வர் முயற்சி செய்து வருகிறார்கள்.

உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருவரையும் பிரித்துவிட முடியுமா என்பதில் டாக்டருக்குக் கவலை ஏற்பட்டிருக்கிறது. இதுவரை இவர்கள் ஆரோக்கியமாகத்தான் இருந்தார்கள். இப்பொழுது ஒருத்திக்கு முடக்கு வாதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு சகோதரி மிகவும்

சௌக்கியமாகத்தான் இருக்கிருள். உலகிலேயே பிலிப்பைன்ஸில்தான் இதைப்போல இரண்டு உடல்கள் சேர்ந்த அதிசயமான பிறவி ஒன்று காணப்படுகிறதாம்.

### கேள்விகள்

1. இரட்டைச் சகோதரிகள் எங்கு வசிக்கிருர்கள்? அவர்களின் பெயர்கள் யாவை?
2. டாக்டர்களுக்கு என்ன கவலை ஏற்பட்டிருக்கிறது?
3. இவர்களைப் போன்றவர் வேறு எங்கே இருக்கிருர்கள்?

### இலக்கணம்

பின்வரும் பெயர்ச்சொற்களை வகைப்படுத்தி எழுது.

பெங்களூர், உடல், கங்கம்மா, ஆஸ்பத்திரி, பிறவி, ஜமீலா புசித்தல், கிளை, விளையாட்டு, அன்பு, நன்றி.



## 12. ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

| | | |
|---|---|---|
| கவிஞர் | வேதியர் | கடைப்பிடித்தல் |
| தேசபக்தர் | போந்தார். | ததும்புதல் |
| கவிபாடுவது | நல்வாக்கு | மனப்பாடம் |
| வல்லவர் | தேசியப்பற்று | ஆஸ்தானம். |
| அந்தணர் | தியாகம் | தொண்டு. |

நாமக்கல் கவிஞர் என்ற சிறப்புப்பெயர் பெற்ற தேச பக்தரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பிறந்த ஊர் நாமக்கல்: அவர் கவி பாடுவதில் வல்லவர்.

ஆகையால் அவரை நாமக்கல் கவிஞர் என்று தமிழ் நாட்டார் அன்புடன் அழைக்கிறார்கள்.

கவிஞரின் இயற்பெயர் இராமலிங்கம் பிள்ளை என்பதாகும். இராமலிங்கம் என்ற பெயர் தமக்கு வைக்கப்பட்ட காரணத்தை அவரே ஒரு கூட்டத்தில் சொல்லி இருக்கிறார்.

இராமலிங்கம் பிள்ளை தமது பெற்றோருக்கு ஏழாவது குழந்தையாகப் பிறந்தவர். இவருக்கு முன் பிறந்த அறுவரும் பெண்கள்.

ஓர் அந்தணர் தம் மனைவியுடன் இராமேசுவரத்திற்குச் சென்று திரும்பும் பொழுது இவர் வீட்டில் சில காலம் தங்கினார். அச்சமயம் இராமலிங்கம் பிள்ளை தம் தாயின் வயிற்றில் இருந்தார். ஆண் குழந்தை யற்ற இவரது பெற்றோர் ஆண்குழந்தையே பிறக்க வேண்டு மென்று, ஏங்கினர். இதை அறிந்த அவ்வந்தணர் இவர் தாயாரைப் பார்த்து, "உங்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும். அக்குழந்தைக்கு இராமலிங்கம் என்று பெயரிடுங்கள். அவன் பெரியவனான பின் புகழுடன் விளங்குவான்" என்று சொல்லிப் போந்தார். அவர் கூறிய நல்

வாக்குப்படியே இராமலிங்கம் பிள்ளை பிறந்தார். அவ்வந்தணர் விருப்பப்படியே பெற்றோர்கள் குழந்தைக்கு இராமலிங்கம் என்று பெயரிட்டார்கள்.

இராமலிங்கம் பிள்ளை சிறுவயதிலேயே நாட்டுப் பற்றுக் கொண்டார். தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்து பல அரிய தியாகங்களைச் செய்தார். மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளாகிய, சத்தியம்; அஹிம்சை, வகுப்பு ஒற்றுமை, அன்பு முதலியவற்றைத் தம் வாழ்க்கையில் இன்றும் கடைப்பிடித்து வருகிறார்.

கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரைப் போலவே, இவர் உணர்ச்சி ததும்பும் பாடல்கள் பலவற்றைப் பாடி யிருக்கிறார். இவருடைய அருமை யான பாடல்களை மனப்பாடம் செய்து பாடுங்கள். உங்களுக்குத் தாய் நாட்டுப்பற்றும் தாய் மொழிப்பற்றும் உண்டாகும்.

இவருடைய பாடல்களின் மேன்மையை உணர்ந்த நம் சென்னை அரசாங்கத்தார் இவருக்கு 'ஆஸ்தான கவிஞர்' என்ற பட்டம் கொடுத்துப் பாராட்டியிருக்கிறார்கள். இவர் நீடூழி வாழ்ந்து நம் தமிழ்த்தாய்க்குச் சிறந்த தொண்டு புரிய வேண்டுமென நாம் திருவருளை வேண்டுவோமாக.

### கேள்விகள்

1. இராமலிங்கம் பிள்ளைக்கு அப்பெயர் ஏற்பட்ட வரலாறு யாது?
2. நாமக்கல் கவிஞர் யாருடைய கொள்கைகளைக் கடைப் பிடித்து வருகிறார்?
3. சென்னை அரசாங்கத்தார் இவருக்கு அளித் திருக்கும் கௌரவப் பட்டம் யாது?

### பயிற்சி

1. கீழே கொடுக்கப் பட்டிருக்கும் சொற்களை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.
   தொண்டு, வல்லவர், அன்புடன், கூட்டத்தில்.
2. எதிர்ப்பதங்கள் எழுது.

| | |
|---|---|
| உண்மை | பிறந்தது. |
| விருப்பு | ஒற்றுமை. |

### இலக்கணம்

1. **கவிஞர், இராமன், சீதை, அந்தணர், இராமலிங்கம்.** இச் சொற்கள் மனிதர்களின் பெயர்களைக் குறிக் கின்றன அல்லவா? இவை **உயர்திணை** எனப் படும். திணை என்றால் வகுப்பு எனப் பொருள் படும். புத்தகம், மரம், நாய், வீடு, இவை மனிதரும், தேவரும் அல்லாத வேறு பொருள் களைக் குறிக்கின்றன. ஆகவே இவை **அஃறிணை** எனச் சொல்லப்படும். அல் + திணை = அஃறிணை. (உயர்வு அல்லாத திணை.)
2. பின்வரும் சொற்களுக்குத் திணை கூறு:
   **கந்தன், வள்ளி, நாமக்கல், வீடு, பாரதியார், கமலம்.**



## 13. வழிப்போக்கனும் ஆலமரமும்

[இப்பாடத்தை மௌனமாகப் படித்து அடியிற் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுது. பின், படித்து உன் மாமாவிடம் சொல்வது போல் கூறு.]

| | | |
|---|---|---|
| பெருமையை | கடவுள் | அடித்து |
| வழிப்போக்கன் | பெரிய | விழுந்தது |
| இருந்தது | கொடுக்கவேண்டும் | கொண்டான் |
| அண்ணாந்து | ஏளனமாக | சிறியதாக |
| பழங்கள் | தூங்கினான் | தப்பியது |

கோடைக் காலத்தில் ஒரு நாள் ஒரு—— வெகு தூரம் நடந்து களைப்படைந்தான். வழியில் ஓர் ஆலமரம்——. வழிப்போக்கன் மரத்தின் அடியில் உட்கார்ந்து —— பார்த்தான். மரத்தில் —— பழுத்திருந்தன. இப்பெரிய மரத்திற்குக் —— சிறிய பழங்களைக்

கொடுத்திருக்கிறாரே; பெரிய மரங்களுக்குப் ——பழங்களை அல்லவா —— என்று எண்ணினான்; கடவுளின் செய்கையை——ப்பேசினான். பிறகு சற்று நேரம் அம் மரத்தடியிலேயே படுத்துத்——.

காற்று ——, ஓர் ஆலம்பழம் அவன் தலையில் ——. வழிப்போக்கன் விழித்துக் ——. "இப்பழம் —— இருந்ததால் என் தலை ——. நான் கடவுளின் —— உணராமல் பேசிவிட்டேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு மிகவும் வருந்தினான். பிறகு கடவுளை வணங்கி வாழ்த்தி விட்டுத் தன் வழியே சென்றான்.

இலக்கணம்

ஓர் ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஆண்பால் பெயர் எனப்படும்.

உதாரணம்: வழிப்போக்கன், கந்தன்.

ஒரு பெண்ணைக் குறிக்கும் பெயர்ச்சொல் பெண்பால் பெயர் எனப்படும்.

உதாரணம்: அரசி, சீதை

ஆண்களில் பல பேரையோ, பெண்களில் பலபேரையோ அல்லது ஆண் பெண் கலந்த பலபேரையோ குறிக்கிற சொற்கள் பலர் பால் எனப்படும்.

உதாரணம்: அரசர்கள், பெண்கள், ஜனங்கள்.

இவை மூன்று பால்களும் உயர்திணையைச் சேர்ந்தவை.

அஃறிணையில் இருவகைப் பால்களால் பெயர்கள் வழங்கப்படும். ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஒன்றன் பால் எனப்படும்.

உதாரணம்: வீடு, மாடு.

பல பொருள்களைக் குறிக்கும் அஃறிணைப் பெயர்ச் சொல் பலவின் பால் எனப்படும்.

உதாரணம்: மாடுகள், வீடுகள்.

## 14. கடிதங்கள்

கடிதம் எழுதும் முறை: முதலில் வலது கைப்புறத்தில் வீட்டின் எண், தெரு, ஊர், தேதி முதலியவற்றை எழுதவேண்டும். அதற்குக் கீழே இடது கைப்பக்கத்தில் யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவருக் கேற்றபடி "என் அன்புள்ள தந்தையீர்", "அன்புள்ள நண்பா", "ஐயா" என்பது போன்ற சொற்களை எழுதவேண்டும்.

பிறகு வணக்கத்தைத் தெரிவித்துச் செய்திகளை எழுதவேண்டும். முடிவில் "தங்கள் அன்புள்ள", "தங்கள் கீழ்ப்படிதலுள்ள", "தங்கள் வணக்கமுள்ள" என்பனவற்றில் ஏற்றதை எழுதிக் கையெழுத்துப் போடவேண்டும். விலாசம் தெளிவாக எழுதப்படவேண்டும். மாதிரிக் கடிதங்களைக் கவனிக்கவும்.

### கடிதம் 1.

45, தெற்கு வீதி,
தஞ்சாவூர்,
26—12—1949.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு,

நமஸ்காரம். இங்கு நானும் நமது உறவினர்களும் சுகமா யிருக்கிறோம். அங்கே

447078

தாங்கள், தாயார், இன்னும் எல்லோருடைய சுகத்திற்கும் விவரமாகக் கடிதம் எழுதக் கேட்டுக் கொள்ளுகிறேன்

எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அரை வருஷத் தேர்வு முடிந்தது. நான் நன்ருக விடை அளித்திருக்கிறேன்.

என் பாடசாலை, பொங்கல் விடுமுறைக்காக நான்கு தினங்கள் மூடப்படும். அப்பொழுது நான் நமது கிராமத்திற்கு வர ஆசைப்படுகிறேன். தங்களுடைய பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
நாராயணசாமி.

விலாசம் :
ஸ்ரீ. ரா. இராமநாதன்,
35, நாடிமுத்து நகரம்,
பட்டுக்கோட்டை.

## கடிதம் 2.

23. மேலைத் தெரு,
பைங்காநாடு.
29—12—1949.

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கு யாவரும் நலமே. அங்கு யாவருடைய சுகத்திற்கும் எழுதக் கோருகிறேன்.

நேற்று எங்கள் பாடசாலையில் பெற்றோர் தினமும், ஆண்டு விழாவும் நடைபெற்றன. அன்று காலையிலேயே ஓட்டப் பந்தயம், பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்கள் நடந்தன. மாலையில் பெற்றோர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். மன்னார்குடி தாலுகா பாடசாலைகளின் 'இன்ஸ்பெக்டர்' அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் விளையாட்டுக்களில் ஜயித்தவர்களுக்குப் பரிசு வழங்கினார். தவறாமல் பாடசாலைக்கு வந்தவருக்கும் ஒரு பரிசு வழங்கப்பட்டது.

எனக்கு ஒரு பரிசும் கிடைக்கவில்லை. ஆனால் நமது பாப்பாவுக்கு ஒரு பரிசு கிடைத்தது. நான் எவ்வாறேனும் அடுத்த ஆண்டில் பரிசு வாங்க முயல்வேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள
**சாமிநாதன்.**

**விலாசம் :**

ஸ்ரீ. வெ. கோபாலன்,
73. சன்னிதித் தெரு,
திருவையாறு போஸ்ட்,
தஞ்சாவூர் (வழி).

**பயிற்சி**

1. நீ உன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுதி, உனக்குப் புத்தகமும் பணமும் அனுப்பச் சொல்லு.

## 15. குடிசைக் கைத் தொழில்கள்

| | | |
|---|---|---|
| பல்வேறு | சோம்பேறி | பராமரிப்பது |
| பலமடங்கு | திண்டாட்டம் | தோன்றுதோட்டு |
| கைத்தொழில் | வருவாய் | இயற்கை |
| நசித்தன | குடிசைத்தொழில் | சம்பாதித்த |
| தொழிற்சாலை | சம்பாதித்தல் | வளமை |

பிள்ளைகளே! நீங்கள் கைத்தொழில்களின் பல்வேறு வகைகளையும், அவைகள் நமக்கும், நம் நாட்டினர்க்கும் செய்யக் கூடிய நன்மைகளையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

நமது இந்தியா தேசம் பல லட்சக்கணக்கான கிராமங்களையும், மிகச் சில பட்டணங்களையும் தன்னகத்தே கொண்டது. ஆகவே கிராமங்களில் வாழும் ஜனங்களே நகரங்களில் வாழும் ஜனங்களை விடப் பல மடங்கு அதிகமாவார்கள். நகரத்து மக்களுக்கு வேண்டிய பலவகை உணவுப் பொருள்களும் கிராமங்களிலிருந்தே வரவேண்டியிருக்கின்றன.

சமீபகாலத்தில் நம் நாட்டு மக்கள், தாம் முன்பு செய்து வந்த பல சிறு கைத்தொழில்களையும் மறந்து விட்டனர். கிராமங்களில் நடந்து வந்த பல கைத்தொழில்களும் நசித்து விட்டன. இவற்றிற்குக் காரணம் நகரங்களில் இயந்திரங்களும், தொழிற் சாலை

களும் ஏற்பட்டு, அவைகளினால் வேலைகள் நடந்து விடுவதேயாகும். ஆகவே மக்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தொழில்களில் லாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தவிக்கிறார்கள். அவர்கள் இயற்கைத் தொழில்களை மறந்ததனாலும், வேலை செய்து ஊதியம் பெற இயலாமையாலும் வறுமை மேலிட்டுச் சுகவாழ்வு நடத்த முடியவில்லை. அதனால் சோம்பலும் ஏமாற்றமும் அவர்களிடம் குடிகொண்டு விடுகின்றன.

ஆகவே கிராமங்களில் வாழும் மக்களும், நகரங்களில் வேலையில்லாமல் இருப்பவர்களும் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழி தேட வேண்டியது அவசியமாகிறது. நமது மூதாதையர்களால் செய்யப்பட்டு வந்த சிறு கைத் தொழில்களையே மறுபடியும் பயிற்சி செய்து அதைச் செய்வது தான். இதற்குத் தக்க வழியாகும். இத்தொழில்களைக் குடிசைத் தொழில்கள் என்று சொல்லலாம்.

நமக்கு உணவைப் போலவே ஆடைகளும் இன்றியமையாதவை. நாம் பெரும்பாலும் உடுப்பவை பருத்தி ஆடைகளே.

நூல் நூற்பது ஒரு சிறந்த குடிசைத் தொழிலாகும். நூல் நூற்பதற்குச் செடிப் பருத்தி

யும், கொடிப் பருத்தியும் பயன் படுகின்றன. பருத்திக் காய்களைக் கொட்டை நீக்கி, பஞ்சை எடுப்பார்கள். பிறகு பஞ்சை வில்லினுல் அடித்துத் தூசுகளைப் போக்கி, நூற்பதற்கு வசதியாய்ப் பட்டைகளாகச் செய்ய வேண்டும். அப் பட்டைகளிலிருந்து மெல்லிய நூலிழைகளைக் கைராட்டை அல்லது தக்களியினுலே நூற்கலாம். நீங்கள் தக்களியில் நூற்கப் பழகி யிருப்பீர்கள். தக்களியைவிட இராட்டையில்தான் வேகமாக நூற்கமுடியும்.




தற்காலத்தில் கைராட்டைகள் பலவித மாகப் பெருகி யிருக்கின்றன. இராட்டையில் நூற்கப் பட்ட நூலை நாற்பத்தெட்டு அங்குல மாக ஒரு சுற்றுச் சுற்றுவார்கள். அம்மாதிரி எண்பது சுற்றுகள் கொண்டது ஒரு குஞ்சம். எட்டுக் குஞ்சங்கள் ஒரு சிட்டம் எனப்பெயர் பெறும்.

இம்மாதிரி, பல சிட்டங்களை எடுத்துப் போய் நெய்பவரிடம் கொடுத்தால் அவர் ஆடை நெய்து கொடுப்பார்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஓய்வு நேரங்களில் நூற்கக்கூடிய நூலைக்கொண்டு உங்களுடைய தினசரி உபயோகத்திற்கு வேண்டிய ஆடைகளைப் பெறமுடியும்.

**ஆடு மாடுகள் பேணல் :** கிராமங்களில் வேளாண்மைக்கு வேண்டிய நேரம் போக மிகுதி நேரத்தில், ஆடு மாடுகளை வளர்ப்பதில் அதிக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுல் அவர்களது வருவாய் பெருகும். நல்ல பசுக்களையும், எருமைகளையும் வளர்த்துப் பாலைப் பெற்று, வெண்ணெய், தயிர் முதலியவைகளை அடையலாம். தேவைக்குப் போக மிகுதியானவற்றை விற்றுப் பணம் சம்பாதிக்கலாம். அதனுல் தான் '**ஆடும், மாடும் குடிகளின் செல்வம்**' என்று சொல்வது வழக்கமாயிருந்து வருகிறது.

**கோழி வளர்த்தல்:**—கிராம ஜனங்கள் கோழிகளை வளர்க்கலாம். கோழிகளுக்கு நல்ல கூண்டுகள் கட்டி, தகுந்த தீனி போட வேண்டும். கூண்டுகளை அடிக்கடி சுத்தம் செய்து கோழிகளுக்கு நோய் வராமல் பாதுகாக்க வேண்டும். நமது நாட்டுக் கோழி

கள் வருஷத்தில் மூன்று முறை முட்டை யிடும். ஒரு தடவைக்குச் சுமார் முப்பது



முதல் அறுபது முட்டைகள் கிடைக்கும். நல்ல ஜாதிக் கோழிகளாயிருந்தால் அதிக முட்டைகளை இடும். கோழி யின் முட்டைகள் உணவுப் பொருள்களில் ஒன்று. அத னால்முட்டைகளுக்கு அதிகத் தேவையிருக் கும். ஆதலால் கோழிகளை வளர்த்தலும் ஒரு குடிசைத் தொழிலாகும்.

**பாய் நெய்தல் :—** கிராமங்களில் நன்செய் நிலங்களின் வாய்க்கால் ஓரங்களிலும், ஏரி, குளக்கரைகளிலும் வளரக் கூடிய



கோரைப் புல்லால் பாய்கள் நெய்யலாம். நல்ல வளமாயுள்ள கோரைப்புற்களை அரிந்து எடுத்து வெய்யிலில் காயவைத் துப் பின் சன்னமாகக் கிழிக்க வேண்டும். பின்பு அவைகளை உடை நெய்வது போலத்

தறியிலிட்டு நெய்யவேண்டும். இதன்மூலம் நல்ல பாய்கள் கிடைக்கும்.

**கூடைமுடைதல்:** நம் நாட்டில் உண்டாகும் மூங்கில்களைச் சன்னமாக உடைத்து மெல்லிய சிம்புகளாகச் செய்துகொண்டு பலவிதமான கூடைகளைச் செய்யலாம். பூக்கூடை போன்ற நேர்த்தியான கூடைகளைச் செய்து வர்ணம் கொடுத்தால் மிக நன்ருயிருக்கும்.

**கயிறு திரித்தல்:** கயிறு திரித்தலும் ஒரு குடிசைத் தொழிலாகும். தேங்காய் நாரைக் கொண்டு கயிறுபோடலாம்.



தேங்காய் மட்டைகளைத் தண்ணீரில் நன்ருக ஊறவிட்டுப் பின் அவைகளை நன்ருக நசுக்கவேண்டும். நசுக்கின மட்டைகள் நாராகவரும். அவற்றிலுள்ள தூசுகளை உதறிவிட்டு வெய்யிலில் காயவைத்துப் பின் கயிருக முறுக்கலாம்.

இதற்கு ஒரு கொட்டாங்கச்சியும், ஒரு குச்சியுமே தேவையாகும். ஒருவர் கயிற்றின் ஒரு நுனியைக் கொட்டாங்கச்சியின் துவாரத்தின் வழியாக விட்டுக் குச்சியை நுனியில் செருகிக்கொண்டு முறுக்கவேண்டும். மற்றொருவர் நாரை இழைத்து விட வேண்டும்.

இக் கயிற்றால் வீட்டுக்குத் தேவையான தாம்புக்கயிறு, மாட்டுத்தும்பு போன்றவைகளைச் செய்து கொள்ளலாம். இத்தொழிலுக்கு மூலதனம் ஏதும் தேவையில்லை.

இவ்விதமான குடிசைக் கைத்தொழில்களை அற்பமென்று நினைக்கக் கூடாது. ஒவ்வொருவரும் தத்தம் வீட்டிற்குத் தேவையானவற்றைத் தாமே செய்து கொள்வதோடு, பிறர் தயவையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

வேலையில்லாது இருப்பவர்களும், ஓய்வு நேரம் கிடைப்பவர்களும் இவ்விதத்தொழில்களைச் செய்து தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். மேலும் இம்மாதிரியான குடிசைத் தொழில்கள் பெருகினால் கிராமத்தில் வாழும் மக்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும். அவர்கள் சுகமாய் வாழவும் இயலும். மேலும் நம் நாட்டின்

செல்வம் நம் நாட்டிலேயே தங்கும். அதனால் நாடும் சிறப்புப் பெறும்.

### கேள்விகள்

1. குடிசைக் கைத் தொழில்கள் மறைந்ததற்குக் காரணங்கள் யாவை?
2. குடிசைக் கைத் தொழில்களில் இரண்டைக் கூறி, அவற்றைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது.
3. நீ உனக்கு ஒழிந்த வேளைகளில் எத் தொழிலைச் செய்ய விரும்புகிறாய்?

### பயிற்சி

1. பதங்களை உபயோகித்து வாக்கியங்கள் அமை. குடியானவர். வேலையில்லாதவர். நேர்த்தியான. பலன். பொருள் சம்பாதித்து.

### இலக்கணம்

1. பின் வரும் சொற்களுக்குத் திணை, பால், எண் எழுது.

   ஆடை, குடியானவர், கோரை, தக்களிகள், கோழி, மாடுகள், ராட்டை.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைப் பிரித்து எழுது.
   1. குடியானவர் கோழியை வளர்க்கிறார்.
   2. பையன் தக்களியில் நூற்கிறான்.
   3. கைத் தொழில்கள் நசித்து விட்டன.



## 16. ஆடு ராட்டே!

பல்லவி

ஆடுராட்டே! சுழன் றாடுராட்டே!

அநுபல்லவி

சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே—இனிச்
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே (ஆடு)

சரணங்கள்

பாபம் குறையுமென்று ஆடுராட்டே—இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே!
கோபங் குறையுமென்று ஆடுராட்டே—நல்ல
குணங்கள் மிகுந்ததென்று (ஆடு)

உழுது நெய்துபல தொழில் செய்து—பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம்
தோல்வி யடையுமென்று (ஆடு)

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார்
—பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்ப மில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
சுத்தப்படு மென்று சொல்லி (ஆடு)

சாந்தி பெருகு மென்று ஆடுராட்டே—மனச்
சாட்சி விளங்கு மென்று ஆடுராட்டே
காந்தி துலங்குமென்று ஆடுராட்டே—அந்தக்
காட்சி சுதந்தர மென்(று) (ஆடு)

—ஆஸ்தான கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

அரும்பதவுரை: சுயராஜ்யம் - சுதந்திர ஆட்சி; மறையும் - ஒழியும்; மிகுந்தது - நிறைந்தது; பணிபுரியும் - ஏவல் செய்யும்; குடி - குடும்பம்; சாந்தி - அமைதி; துலங்கும் - விளங்கும்.

பயிற்சி :

1. பாட்டை மனப்பாடம் செய்யவும்.

2. ராட்டை சுற்றுவதனல் ஏற்படும் நன்மைகளை எழுது.

---

## 17. சமயோசித புத்தி

| | | |
|---|---|---|
| தென்னாடு | பொழுது | வெண்பா |
| வித்துவான் | உண்ட | கீறல் |
| தனவான் | அருந்திய | அழுகல் |
| நாடி | அழைப்பு | தகுதியற்றது |
| கவி | ஆற்றல் | சமயோசிதம் |
| வெகுமதி | கவித்திறமை | சாதுர்யம் |

[இந்தக் கதையை மௌனமாகப் படித்து உன் தாயாரிடம் சொல்லுவது போல் சொல்லு.]

தென்னாட்டிலே முன்னொரு காலத்தில் இராமகவி என்ற வித்துவான் ஒருவர் இருந்தார். வித்துவான்கள் அந்நாட்களில் வள்ளல்களை நாடிக் கவிபாடி, பரிசுபெற்றுப் போவது வழக்கம். வள்ளல்களும் கவிகளின் கவித்திறமையை மெச்சி, அவர்களை ஆதரித்துப் போற்றி வந்தனர்.

அக்காலத்தில், உடையார் பாளையத்தில் ஒரு தனவான் இருந்தார். அவரை யாவரும் **உடையார்** என்று அழைப்பது வழக்கம். உடையார் என்னும் பட்டத்தை உடையவராதலால் அவர் அவ்வாறு அழைக்கப்பட்டார். அவர் கல்வியில் தேர்ச்சியுடையவர். கற்றவர்களிடத்திலும் அவருக்கு மிகுந்த அன்புண்டு. அவர் தம்மிடம் வந்து தம்மைக் காணும் புலவர்களை அன்புடன்

வரவேற்றுத் தக்க வெகுமதிகளைக் கொடுப்பது வழக்கம். அக்காலத்தில் அவரே தலை சிறந்த வள்ளலாக இருந்தார்.

இராமகவி இச்செய்தியைக் கேட்டதும் உடையாரை நாடி, கவிபாடிப் பரிசு பெற எண்ணி அவ்வூருக்குச் சென்றார். அவர் உடையார் பாளையத்தை அடைந்த சமயம் பொழுது மறைந்தது. ஆயினும் இராமகவி அன்றிரவே உடையாரைப் பார்க்க நிச்சயித்துப் புறப்பட்டார்.

பெரியோர்களையோ, குழந்தைகளையோ, வள்ளல்களையோ பார்க்கச்செல்வதென்றால், ஏதேனும் கையில் எடுத்துக் கொண்டு செல்வது பழக்கமாயிருந்து வருகிறது. இராமகவி ஓர் எலுமிச்சம் பழத்தை வாங்கிக் கொண்டு போகலாமென்று எண்ணி, அதை வாங்கக் கடைக்குச் சென்றார். கடைகளில் எலுமிச்சம் பழம் கிடைக்கவில்லை. ஆதலால் அவர் அங்கே கிடைத்த ஒரு தேங்காயை வாங்கிக்கொண்டு உடையாரிடம் சென்றார்.

உடையார் சாப்பிட்டுவிட்டுப்பின், வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். இது தான் நல்ல சமயம் என்றறிந்த இராமகவி தமது வரவைத் தெரிவித்துப் பின் அவரது அழைப்பைப் பெற்று உள்ளே சென்றார்.

உடையார் இராம கவியை மரியாதையுடன் வரவேற்று அவர் வந்த வரலாற்றைத் தெரிவிக்கும்படிக் கேட்டார். கவி உடையாரைப் பார்த்து, "தாங்கள் புலவர்களை ஆதரிக்கும் ஆற்றலுடையவர் என்று கேள்விப்பட்டேன். எனது திறமையைக்காட்டி ஏதேனும் வெகுமதி பெறலா மென்று வந்தேன்" என்றார்.



உடையார் அதற்கு மனமுவந்து சம்மதிக்கவே கவி தமது கவித்திறமையைக் காட்டி ஒரு வெண்பாவைப் பாடினார். உடையார் அப் பாட்டைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து இராமகவியைப் பாராட்டினார். அவர் இராம கவியை அங்கேயே இருந்து இரவைக் கழிக்கலா மென்று கூறித் தங்கிப்

போகும்படிச் சொல்லவே, கவியும் அதற்கு ஒப்புக் கொண்டார். இருவரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கையில் உடையார் வெற்றிலை பாக்குப் போட்டு கொண்டார். அதில் சுண்ணாம்பு கொஞ்சம் அதிகமாய்ப் போய் விட்டது.

உடனே உடையார், கவிராயர் கொண்டு வந்த தேங்காயை உடைத்தால் ஒரு கீறல் போட்டுக் கொள்ளலாம் என்றார். உடனே தேங்காயை உடைக்கவே, அது அழுகியிருந்தது. உடையார், "என்ன கவிஞரே! அழுகிய தேங்காயைக் கொணர்ந்தீரே! அது உண்பதற்குத் தகுதியற்றதாய் இருகிறதே" என்றார். கவிஞர் தாம் கவனிக்காமல் அந்தத் தேங்காயை வாங்கியதை நினைத்து வருத்தங் கொண்டார். ஆயினும் அவர் சமயோசிதமாக, "தங்கள் பெயர் உடையார் என்று பெருமையாக அழைக்கப் படுகிறது; அதனால் இதைக் கவனிக்காமல் வாங்கிக் கொண்டு வந்தேன். தாங்கள் உடைப்பீர் என்று தெரிந்திருந்தால் கவனித்து வாங்கிக் கொண்டு வந்திருப்பேன்" என்று சாதுர்யமாய்ப் பதிலளித்தார்.

இதைக் கேட்ட உடையார், இராமகவியின் சமயோசிதபுத்தியை மெச்சி, அவருக்கு வேண்டிய அளவு பரிசு கொடுத்தார்.

### கேள்விகள்

1. பெரியோர்களைக் காணச் செல்லும்போது கையாளும் பழக்கம் யாது?
2. கவிஞர் எதற்காக மனம்வருந்தினர்?
3. உடையார் கவிஞரை என்ன கேட்டார்?
4. கவிஞர் என்ன விடை கூறினர்?

### பயிற்சி

கீழ்க்காணும் வார்த்தைகளை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

அன்பு, ஆயினும், ஆற்றல், சாதுர்யம், நல்ல சமயம், வேண்டிய அளவு.

### இலக்கணம்

1. கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்து எழுது.

1. உடையார் பாளையத்தில் ஒரு தனவான் இருந்தார்.
2. உடையார்பாளையத்தை அடைந்த் சமயம் பொழுது மறைந்தது.
3. செல்லுவது வழக்கமாயிருக்கிறது.
4. பழம் கடையில் கிடைக்கிறது.

2. சென்ருன், செல்கிருன், செல்வான். இம் மூன்று வினைச் சொற்களையும் கவனி. சென்ருன் என்ற வினைச் சொல் செயல் நடந்ததைக் காட்டுகிறது. ஆதலால் செயல் நடந்த வினைச் சொல்லுக்கு இறந்தகால வினைச்சொல் என்றுபெயர்.

செல்கிருன். இவ்வினைச் சொல் செயல் இப்பொழுது நடக்கிறதைக் குறிப்பதால் நிகழ் கால வினைச் சொல் எனப்படும்.

செல்வான் என்னும் வினைச் சொல் செயல் இனி நடக்கப் போவதைத் தெரிவிப்பதால் எதிர்கால வினைச் சொல் என்று அழைக்கப்படும்.



## 18. ஜவாஹர்லால் நேரு

| | | |
|---|---|---|
| உத்தமன் | திகழும் | அரும்பணி |
| சொற்சுவை | மாணிக்கம் | சத்தியாக்கிரகம் |
| ஐக்கியம் | அரசியல் | இயக்கம் |
| கியாதி | பற்றுதல் | பொருட்சுவை |
| அருமை | தூண்டியது | உலகத்தினர் |

சுதந்திர இந்தியாவின் 'முடி சூடா மன்னர்' என்று போற்றப்படும் உத்தமர் யார்? அவரே நம் இந்தியப் பிரதமமந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு. நம் பாரத நாட்டின்

பிரதம மந்திரியாக இருக்கும் அவர் அல்லும் பகலும் தாய் நாட்டின் நலனுக்காகப் பாடு படுகிருர். அவருடைய வாழ்க்கை வரலாற்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய மாகாணத்தில் **அலகாபாத்** என்ற ஒரு நகரம் இருக்கிறது. அந்நகரில் பண்டித மோதிலால் நேரு என்ற புகழ் பெற்ற வக்கில் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியின் பெயர் ஸ்ரீமதி ஸ்வரூப ராணி என்பதாகும். பண்டித மோதிலால் நேரு இந்தியாவிலுள்ள செல்வ வந்தர்களில் ஒருவராக மதிக்கப்பட்டார். 'ஆனந்த பவனம்' என்று சொல்லப்படும் அழகான மாளிகையில் அவர் வசித்து வந்தார்.

1889-ம் ஆண்டு நவமபர் மாதம் பதினைன்ரும் தேதி ஸ்வரூப ராணி ஓர் அழகிய ஆண் குழந்தையை ஈன்ருள். பெற்ரேர்கள் அக் குழந்தைக்கு ஜவாஹர் என்று பெயரிட்டு அருமை பெருமையுடன் வளர்த்து வந்தனர். ஜவாஹர் என்ருல் மாணிக்கம் என்பது பொருள். மனிதருள் மாணிக்கமாகத் திகழும் ஜவாஹருக்கு அப்பெயர் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது, பாருங்கள்!

செல்வத்திலே பிறந்து வளர்ந்த ஜவாஹர் படிப்பிற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அவர் இங்கிலாந்தில் வக்கில் பரீட்சையில் தேர்வு பெற்று இந்தியாவிற்குத் திரும்பினர்.

மோதிலால் நேரு தம்மைப் போலத் தம் குமாரரும் 'வக்கில்' தொழிலில் மேன்மையடைவார் என்று கருதினர். ஆனல் ஜவாஹருக்கு வக்கில் தொழிலில் பற்றுதல் ஏற்படவில்லை. அவர் மனம் அரசியல் விஷயங்களிலும், தேச சேவையிலும் பங்கெடுத்துக் கொள்ளவே அவரைத் தூண்டியது.

அக்காலத்தில் மகாத்மா காந்தி அன்னியர் ஆட்சியை ஒழிக்கச் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கியிருந்தார். கத்தி யின்றி, இரத்த மின்றி அஹிம்சைப் போரிட்டுச் சுதந்திரம் பெறுவதே அவர் நோக்க மாயிருந்தது. அவ்வாறு செய்யும் உயர்ந்த போருக்குச் சத்தியாக்கிரகப் போர் என்று பெயர். இலட்சக் கணக்கான மக்கள் இப் போராட்டத்தில் சேர்ந்தனர். அரசாங்கமோ அவர்களைச் சிறையிலடைத்துப் பல இன்னல்களைப் புரிந்தது. இவை ஜவாஹரின் உணர்ச்சியை மேலிடச் செய்தன. உடனே அவர், தம் தொழிலை விடுத்துச் சத்தியாக்

கிரக இயக்கத்தில் சேர்ந்தார். அரசாங்கத்தார் அவரையும் சிறைச் சாலைக்கு அனுப்பினர்.

ஜவாஹர் சிறையிலடைக்கப் பட்டதும், மோதிலால் நேருவின் மனம் பதறியது. உடனே தாமும் வக்கில் தொழிலை விடுத்து அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். நேருவின் குடும்பத்திலுள்ள எல்லோரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

அரசர்களைப் போல் வாழ்ந்த மோதிலால் நேருவும், அவரது செல்வக் குமாரர் ஜவாஹரும் தேசநலத்துக்காக சிறைவாசம் செய்தனர். அதே சமயத்தில் ஜவாஹரின் மனைவியார் கமலா நேருவும் கணவனைப் பின்பற்றிச் சிறைப்பட்டார்.

முதுமைப்பருவம் அடைந்திருந்த ஜவாஹரின் தாயாரும் இப் போரில் சேர்ந்தார். ஜவாஹரின் இரு சகோதரிகளும் மகிழ்ச்சியுடன் சிறைவாழ்வை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு அவருடைய குடும்பம் முழுவதுமே தேசத்திற்காகச் சேவை செய்தது.

மோதிலால் நேரு சிறைவாசத்தின் விளைவாக உடல் மெலிந்து நோயுற்றார். அதன் காரணமாகவே அவர் இறக்கவும் நேரிட்டது. ஜவாஹரின் மனைவி கமலா

நேருவும் சிறையில் நோயுற்று, நோய் தீரா மல் தமது உயிரை இழந்தார்.

ஜவாஹர் தம் வாழ்நாளில் அரசாங்கத் தாரால் பல முறைகள் தண்டிக்கப்பட்டு நீண்டகாலம் சிறையிலிருந்தார். சிறையி லிருந்த காலத்தில் அவர் வீண் பொழுது போக்கவில்லை. வெளியிலிருந்த தம் அரு மைக் குமாரி இந்திராவுக்குச் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த பல கடிதங்களை எழுதினர். அக்கடிதங்களை யெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகச் சமீப காலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அப் புத்தகத்தை ஒவ்வொரு மாணவனும் படிக்கவேண்டும். அவர் தம்முடைய 'சுய சரித'த்தையும் '**நான் கண்ட இந்தியா**' என்ற நூலையும் சிறை யில் இருக்கும் பொழுது தான் எழுதினர். அப் புத்தகங்கள் உலகத்தினரால் மிகவும் பாராட்டப்படுகின்றன.

ஜவாஹர்லால் நேரு மும்முறை தேசீயக் காங்கிரசின் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றினர். அவர் மகாத்மா காந்தியைத் தம் தந்தையைப் போல் கருதிப் போற்றினர். காந்தி யடிகளும் ஜவாஹரைத் தம் 'வாரிசு' என்று பெருமையாகச் சொல்லிக் கொள் வார்.

இவ்வளவு பெருமை வாய்ந்தவரும், உலகப் பெரியார்களில் ஒருவருமாகிய ஜவாஹர்லால் நேரு நம் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரியாய் இருப்பது நாம் முன் செய்த தவப் பயனேயாகும். அவர் நெடுங் காலம் வாழ்ந்து பாரத நாட்டிற்கு மேன் மேலும் தொண்டு புரிவாராக.

### கேள்விகள்

1. ஜவாஹர்லால் நேருவின் தாய் தந்தையர் யாவர்?
2. அவர் எவ்வூரில் பிறந்தார்?
3. அவர் சிறையிலடைக்கப்பட்டது ஏன்?
4. சிறையிலிருந்த பொழுது நேரு, தம் நேரத்தை எவ்வாறு கழித்தார்?
5. காந்தியடிகள் நேருவை எவ்வாறு கருதினர்?
6. நேருவின் குடும்பத்தைப் பற்றி நீ படித்ததைப் பத்து வரிகளில் எழுது.

### பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் கூறு:—
   சுதந்திரம், நல்லவன், செல்வம், பகல்.
2. கீழ்க்கண்ட சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது.
   அல்லும் பகலும், இன்னல், பதறியது, வீண்பொழுது.

### இலக்கணம்

பெயர்ச் சொற்கள் வழங்கப்படும் இடம் அல்லது நிலையைக் குறிப்பது இடம் எனப்படும். இடம் மூன்று வகையாகப் பிரிக்கப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாம்.

நான் என்று சொல்லும் பொழுது சொல்லுபவன் தன்னையே குறிக்கின்றான். அம்மாதிரி தன்னையே குறிக்கும் பெயர்ச் சொல்லைத் தன்மை இடம் என்பார்கள்.

நீ என்று சொல்லும் பொழுது முன்னாலிருப்பவனைக் குறிப்பதால் முன்னிலை இடம் ஆகும்.

அவன் என்று சொல்லும் போது தானும், முன்னிற்பவனும் அல்லாது வேறு ஒருவனைக் குறிப்பதால் படர்க்கை இடம் என்று சொல்லப்படும்.

| | |
|---|---|
| நான் | தன்மை இடம் |
| நீ | முன்னிலை இடம் |
| அவன் | படர்க்கை இடம் |

இவற்றிற்கு ஒருமை, பன்மை உண்டு.

உதாரணம்:—

| இடம் | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை | நான் யான். | நாங்கள், நாம், யாம் |
| முன்னிலை | நீ | நீர், நீங்கள், நீவிர் |
| படர்க்கை | அவன், அவள் | அவர், அவர்கள் |
| | அது | அவை, அவைகள். |
| | மாடு | மாடுகள் |




## 19. கிராமப் பஞ்சாயத்து

| | | |
|---|---|---|
| அரசாங்கம் | ஜனத்தொகை | உபதலைவர் |
| நியமித்தல் | வோட்டுரிமை | சிப்பந்திகள் |
| பஞ்சாயத்து | வோட்டர் | பொறுப்பு |
| அங்கத்தினர் | பதவி | பொது மக்கள் |
| உத்தியோகஸ்தர் | தலைவர் | பொதுப்பணம் |

பிள்ளைகளே! ஒவ்வொரு கிராமத்திலும் கிராம உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் அரசாங்க வேலைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே கிராமத்தின் பொதுக்காரியங்களைக் கவனிக்கக் கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து சபை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

கிராமப் பஞ்சாயத்து சபையில் கிராமத்தின் ஜனத் தொகைக்கு ஏற்றவாறு எட்டு முதல் பதினாறு அங்கத்தினர்கள் வரையிலிருப்பார்கள். இச்சபையின் 'அங்கத்தினர்' களைக் கிராமத்திலுள்ள 'வோட்டுரிமை. பெற்ற ஜனங்கள் தேர்ந்தெடுப்பார்கள். இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும், 'வோட்டர்'களாகப் பதிவு செய்யப்படுவர்.

ஒருவர் ஒருமுறை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மூன்று வருஷங்கள் வரை அவர் அப்பதவியை வகிக்கலாம். பைத்தியம் பிடித்தவர், பெரும் வியாதியுள்ளவர், குற்றம் செய்து தண்டனை அடைந்தவர் முதலியவர்களைத் தவிர, வேறுயார் வேண்டுமானாலும் அங்கத்தினர் பதவிக்கு நிற்கலாம்

இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரையும், ஓர் உபதலைவரையும் பொறுக்கிக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்து சபையின் தலைவரே பஞ்சாயத்தின் நிர்வாகத்தை நடத்துவார். தலைவர் இல்லாத காலங்களில் உபதலைவர் அக் காரியங்களைச் செய்வார்.

தலைவர், பஞ்சாயத்து சபையை மாதம் ஒரு முறையாவது கூட்டி, கிராமத்திற்குச்

செய்யவேண்டிய காரியங்கள் யாவை, அவை எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டும். பஞ்சாயத்து சபையார் தீர்மானித்தபடி தலைவர் காரியங்களை நடத்த வேண்டும்.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து சபையும் தங்கள் கிராமத்திற்கு நன்மையான காரியங்களைச் செய்ய வேண்டும். கிராமத்திலுள்ள தெருக்களைச் சுத்தம் செய்தலும், அதற்கான சிப்பந்திகளை நியமித்தலும் அவர்களின் முக்கிய கடமையாகும். குடி தண்ணீருக்குக் கிணறுகள் தோண்டுவதும், பழைய கிணறுகளைச் செப்பனிடுவதும், குளம் குட்டை இவைகளை மராமத்து செய்வதும் அவர்களின் வேலையாகும். பழைய சாலைகளைப் பழுது பார்த்து, புதிய சாலைகளை அமைப்பதும், தேவையான இடத்தில் பாலங்கள் கட்டுவதும் அவர்களின் பொறுப்பாகும்.

பஞ்சாயத்து சபையார் தங்கள் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலையை ஏற்படுத்திக் கிராமத்துக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி போதிக்க முயற்சி செய்யலாம். வாசக சாலை, புத்தக சாலை, முதியோர்க் கென இராப் பாடசாலை முதலியவைகளையும் ஏற்

படுத்தலாம். கிராம மக்களுக்கு நன்மை தரும் எக்காரியங்களையும் அவர்களுக்குச் செய்ய உரிமை உண்டு.

இவ் வேலைகளைச் செய்யப் பஞ்சாயத்து சபைக்குப் பணம் தேவையாயிருக்கு மல்லவா? அதற்காகப் பஞ்சாயத்து சபையார் கிராமத்தில் வீட்டுவரி, தொழில்வரி, வாகனவரி முதலியவைகளை விதித்து வசூல் செய்கிறார்கள். கிராமத்தில் விதிக்கப்படும் 'செஸ்' என்னும் வரியில் ஒரு பாகத்தை பஞ்சாயத்து சபைக்கு அரசாங்கத்தார் கொடுக்கிறார்கள். மேலும் அவர்கள் கிராமத்திலுள்ள குளம், குட்டை. இவைகளிலிருக்கும் மீன்களை விற்றும், குப்பைகளை விற்றும் பணம் சேகரித்துக் கொள்ளலாம்.

பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கும், தலைவருக்கும் சம்பளம் கிடையாது. அவர்கள் பொது மக்களுக்கு உழைப்பதற்காகவே அங்கம் வகிக்கிறார்கள். ஆகையால் பொது நலத்திற்கு உண்மையாக உழைப்பவர்களே அச் சபையில் அங்கம் வகிக்கத் தகுதியுடையவர்.

சுய நலங் கொண்டு பொதுப் பணத்தை வீண் காரியங்களில் செலவழிப்பவர்கள்

அப் பதவிகளுக்கு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது கிராமத்தினரின் முக்கிய கடமையாகும்.

### கேள்விகள்

1. பஞ்சாயத்து சபையில் யாவர் அங்கத்தினரா யிருக்க கூடாது?
2. பஞ்சாயத்து சபையை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு எவருடையது?
3. பஞ்சாயத்து சபை செய்ய வேண்டிய காரியங்கள் யாவை?
4. பொதுமக்களின் கடமை யாவை?
5. பஞ்சாயத்து சபைக்கு வருமானம் எவ்வழி களில் கிடைக்கிறது?

### பயிற்சி

1. எதிர்ப்பதங்கள் கூறு:—
   நன்மை. கௌரவம். நல்லொழுக்கம்.

### இலக்கணம்

1. பசு ஒரு சாதுவான மிருகம்.
   நாம் பசுவை வளர்க்கிறோம்.
   பசுவால் நமக்கு உபயோகம் உண்டு.
   பசுவுக்கு நன்றாகத் தீனி போடு.

பின் மூன்று வாக்கியங்களிலும் பசு என்ற சொல் எழுத்துக்களில் மாறுபட்டு வருகிறது. நான்கிலும் அச் சொல் பொருளிலும் மாறுபட்டிருக்கிறது. மாறுபாடு என் பதை வித்தியாசம் அல்லது வேற்றுமை என்று சொல்லு வார்கள்.

பசு என்ற பெயர்ச் சொல் எழுத்துக்கள் மாறாமல் ஒரு வாக்கியத்தில் வரும்போது, அது வெறும் பெயர்ச்

சொல்லாக இல்லாமல் ஒரு காரியத்தைச் செய்யும் எழுவாயாக வேறுபடுகிறது. எழுவாயை முதல் வேற்றுமை என்று சொல்லுவார்கள். இவ்வேற்றுமைக்கு எழுத்து மாறுபாடு கிடையாது.

பசு என்ற பெயர்ச் சொல் பசுவை என்று மாறும் பொழுது பொருளில் வித்தியாசம் ஏற்படுகிறது.

பசு என்ற சொல்லுடன் ஐ என்ற பதத்தைச் சேர்த்தால் பசுவை என்று மாறுவதைக் கவனி. இது செயப்படு பொருளாகிறது. இதை இரண்டாம் வேற்றுமை என்பார்கள். இதில் சேர்ந்த ஐ என்னும் எழுத்து வேற்றுமை உருபு என்று சொல்லப்படும். பெயர்ச் சொற்களுக்கு எட்டு வேற்றுமைகள் உண்டு.

பசு என்ற பெயர்ச் சொல்லில் ஆல் என்ற மூன்றும் வேற்றுமை உருபு சேர்ந்து பசுவால் என்று மாறுபடுகிறது. ஓடு, உடன் என்பனவும் மூன்றும் வேற்றுமை உருபுகளாகும்.

பசுவுக்கு என்ற நான்காம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லில் கு என்ற 4-ம் வேற்றுமை உருபு சேர்ந்திருக்கிறது.

**2.** கீழ்க்கண்ட பெயர்ச் சொற்களுடன் 2, 3, 4 வேற்றுமைகளைச் சேர்த்து எழுது.

இராமன், புத்தகம், மரம், நாய்.

## 20. கிராமப் பாட்டு.

(சிறுமியர் பாட்டு)

ஒரு கொடியைத் தூக்கத் தூக்க
ஓராயிரம் பாவக்கா; — அது
யாரு துண்ணற பாவக்கா?
அம்மா துண்ணற பாவக்கா;
கசக்குமோ புளிக்குமோ — நீ
கலந்து கொட்டடி சர்க்கரையே!

ரெண்டு கொடியைத் தூக்கத் தூக்க
ஈராயிரம் பாவக்கா; — அது
யாரு துண்ணற பாவக்கா?
அப்பா துண்ணற பாவக்கா;
கசக்குமோ புளிக்குமோ — நீ
கலந்து கொட்டடி சர்க்கரையே!

மூணு கொடியைத் தூக்கத் தூக்க
மூவாயிரம் பாவக்கா; — அது
யாரு துண்ணற பாவக்கா?
பாட்டி துண்ணற பாவக்கா;
கசக்குமோ புளிக்குமோ — நீ
கலந்து கொட்டடி சர்க்கரையே!

பயிற்சி

[உங்கள் கிராமங்களில் பாடிவரும் இத்தகைய பாட்டுக்களைச் சேகரித்துத் தெரிந்து கொள்ளவும். அவைகளை இசையுடன் பாடினால் மனமகிழ்ச்சி ஏற்படுமல்லவா!]

———

## 21. தேசிங்கு மன்னன்

| | | |
|---|---|---|
| பாதுஷா | தோல்வி | சேனைத்தலைவர் |
| தலைமை | கருப்பவதி | பலி |
| அடையாளம் | வாலிபம் | மூளுதல் |
| கப்பத்தொகை | நிகரானவர் | விரைதல் |
| சவாரி | உயிர்த்தோழன் | இரையாயினர் |
| விளம்பரம் | மொழிந்த | ஆவலுடன் |

முற்காலத்தில் டில்லியை ஷாஆலம் என்னும் பாதுஷா ஆண்டு வந்தார். அவருடைய காலத்தில் தென்னிந்தியா பல சிறு பகுதிகளாகப் பிரித்து ஆளப்பட்டு வந்தது. இப் பகுதிகளை ஆண்ட சிற்றரசர்கள் பாதுஷாவுக்குக் கீழ்ப்படிந்து அவர் தலைமையை ஒப்புக் கொண்டிருந்தனர். அதற்கு அடையாளமாகக் கப்பத் தொகையையும் அவர்கள் செலுத்தி வந்தனர்.

டில்லி பாதுஷாவிடம் ஒரு முரட்டுக் குதிரை இருந்தது. அதனை அடக்கி அதன் மீது சவாரி செய்பவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்றும், ஏற முயன்று தோல்வி யடைபவர்கள் சிறையிலடைக்கப் படுவார்கள் என்றும் பாதுஷா விளம்பரம் செய்திருந்தார்.

பல சிற்றரசர்கள் டில்லிக்குச் சென்று குதிரையை அடக்கி பரிசுபெற முயன்ற

னர். ஆனால் அவர்கள் எல்லோரும் தோல்வி யடைந்து சிறையிலடைக்கப் பட்டார்கள். அவ்வாறு சிறைப்பட்டவர்களில் செஞ்சிக் கோட்டையின் அரசர் தரணிசிங்கும் ஒருவராவர்.

தரணிசிங் டில்லிக்குச் செல்லும் பொழுது அவரின் மனைவி கருப்பவதியா யிருந்தாள். அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையே பிற்காலத்தில் தேசிங்கு மன்னன் என்று புகழ் பெற்றது.

தேசிங்கு வளர்ந்து வாலிபப்பருவத்தை யடைந்ததும், அரசருக்குரிய போர்ப் பயிற்சியைப் பெற்றான். குதிரையேறிச் சவாரி செய்வதில் அவனுக்கு நிகரானவர் ஒருவரு மில்லை எனப் புகழ் பெற்றான்.

தேசிங்கு தம் தந்தை சிறையில் அடை பட்டிருப்பதைத் தன் தாய் மூலம் அறிந்தான். உடனே அன்னையின் உத்தரவைப் பெற்றுத் தன் உயிர்த் தோழனை மகம்மது கானுடன் டில்லிக்குச் சென்றான்.

தேசிங்கு, பாதுஷாவிடம் சென்று தான் குதிரையை அடக்கிச் சவாரி செய்ய விரும்புவதாகத் தெரிவித்தான். பாதுஷா சிறுவனின் வீரத்தைப் பார்த்துத் திகைத்தார். இருப்பினும் தேசிங்கு தைரியமாய்

மொழிந்த சொற்களைக் கேட்டுக் குதிரையைக் கொண்டு வர உத்தர விட்டார்.

தேசிங்கு சற்றும் அஞ்சாமல் குதிரையின்மீது ஏறினன். அம் முரட்டுக் குதிரையும்



அவனைத் தூக்கிக் கொண்டு கண்ட விடங்களெல்லாம் ஓடியது. கடைசியில் தேசிங்கு தன் திறமையினல் அந்த முரட்டுக் குதிரையையும் அடக்கிக் கம்பீரமாகச் சவாரி செய்து கொண்டே பாதுஷாவுக்கு முன் வந்திறங்கினன்.

பாதுஷா தேசிங்கின் வீரத்தைப் புகழ்ந்து அவன் அடக்கிய அந்த 'நீல வேணி' என்ற குதிரையையே அவனுக்குப் பரிசாக அளித்தார். தேசிங்குமன்னனின் தந்தை தரணி சிங்கும் உடனே விடுதலை யடைந்து மகிழ்ச்சியுடன் தம் நாட்டிற்குத் தம் மகனுடன் திரும்பினர். அன்றுடன் அவர்கள் கப்பத் தொகை செலுத்துவதும் நிறுத்த அனுமதிக்கப் பட்டது.

சில மாதங்களில் தரணிசிங்கு இறந்து போகவே, தேசிங்கு செஞ்சியை ஆளத் தொடங்கினன். தேசிங்கின் ஆட்சியில் மக்கள் சுகமாக வாழ்ந்து வந்தனர். தேசிங்கின் உத்தம நண்பனை மகம்மதுகானே சேனைத் தலைவனுக அமர்த்தப்பட்டான்.

ஒரு சமயம் செஞ்சிக்கு அருகிலுள்ள ஆர்க்காடு அரசரான நவாப்பிற்கும், தேசிங்கு ராஜனுக்கும் பகை மூண்டது. பகை முற்றிப் போரும் ஏற்பட்டது. ஆர்க்காட்டு நவாப் தம் சேனையுடன் செஞ்சியின்மீது படையெடுத்து வந்தார்.

நவாப் படை யெடுத்து வரும் செய்தி தேசிங்கு ராஜனுக்கு எட்டியதும், தன் சேனைத்தலைவருக்கு செய்தி விடுத்தான். அச்சமயத்தில் சேனைத் தலைவனை மகமத்கான் தனது திருமணத்திற்காகச் சென்

றிருந்தான். அரசரின் செய்தியைக் கேட்ட மகம்மதுகான் தன் திருமணத்தை நிறுத்தி, உடனே செஞ்சிக்கு விரைந்தான். சேனைகளையும் போருக்குத் தயாராக்கினன்.

நவாப்பின் சேனைக்கும், செஞ்சியின் படைகளுக்கும் போர் நடந்தது. வீரனை மகம்மதுகான் தனது படைகளைத் திறம்பட அமைத்து நவாப்புடன் போர் புரிந்தான். நவாப்பின் வீரர்கள் ஆயிரக்கணக்காக மகமதுகானின் வாளுக்கு இரையாயினர். சிறிது நேரத்தில் ஆர்க்காட்டுச் சேனை தோல்வியுற்றுக் கலைய ஆரம்பித்தது.

மகம்மதுகான் வெற்றியுடன் கோட்டைக்குத் திரும்பினன். தன் உயிர்த் தோழரான அரசரிடம் செய்தியைச் சொல்ல ஆவலுடன் செல்லுகையில், ஆர்க்காட்டு நவாப்பின் வீரர்களில் ஒருவன் மறைந்து நின்று மகம்மது கானைத் தன்வாளினல் தாக்கினன். வாள் மகம்மதுகானின் கழுத்தில் பாயவே உடனே அவன் நிலத்தில்விழுந்து மாண்டான். இவ்வளவு தேசபக்தியும், கடமையுணர்ச்சியும் கொண்ட மகம்மதுகான் வீரசுவர்க்கம் அடைந்தான்.

தேசிங்கு இத் துக்கச் செய்தியை அறிந்து வருந்திப் புலம்பினன். தனக்

காக உயிரையே கொடுத்துத் தியாகியான மகம்மதுகானை நினைத்துத் தேசிங்குமன்னன் மறுபடியும் ஆவேசங் கொண்டான். போர் முனைக்குச்சென்று எதிரியின் வீரர்களைத் துரத்தி எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் வெட்டி வீழ்த்தினான். எதிரிகள் எல்லோரும் ஒடி ஒளிந்தனர். ஆர்க்காடு நவாப் தோல்வி யுடன் திரும்பினார்.

வெற்றிபெற்ற தேசிங்கு அரண்மனைக் குத் திரும்பவில்லை. தன் நண்பனின் உடல் கிடக்குமிடம் சென்றான்; தன் நண்பன் தனக்காக உயிர் விட்டதை நினைத்துத் தானும் அவனுக்காக உயிரைப்பலிகொடுக்க நிச்சயம் செய்து கொண்டான். உடனே அவன் தன் வாளை ஆகாயத்தில் வீசியெறி ந்து, அது தன் மார்பில் வந்து பாயும்படி நிமிர்ந்து நின்றான். இவ்வாறு தேசிங்கு மன்னன் தன் நண்பருக்காக வீர மரணம் எய்தினான். உண்மையான நட்பின் சிறப் புக்கு இக்கதை ஒரு சான்றாகும்.

### கேள்விகள்

1. தரணிசிங்கு ஏன் சிறையிலடைக்கப்பட்டார்?
2. அவர் எவ்வாறு விடுதலை யடைந்தார்?
3. தேசிங்கிற்குப் பாதுஷா கொடுத்த வெகுமதி என்ன?

4. முகம்மதுகான் என்பவன் யாவன்? அவனுடைய வீரச்செயல் யாது?

5. தேசிங்கு, மகம்மதுகான் பிரிவிற்காக என்ன செய்தான்?

பயிற்சி

1. வித்தியாசம் தெரிந்து கொள்:—
ஆண்டு = அரசாட்சி செய்து; ஆண்டு = வருஷம்; இவ்வாறு ஒரே சொல்லுக்கு இருபொருள்கள் உண்டு.

கீழ்க்கண்ட சொற்களுக்குள்ள இரு பொருள்களையும் சொல்லு.

மாலை, ஆறு, படி, கல்.

2. எதிர்ப்பதங்கள் கூறு:—
பிரித்து, பிறந்து, ஏறி, புகழ்ந்து, ஆரம்பம்.

இலக்கணம்

இராமன் கடையிலிருந்து வந்தான். இருந்து என்னும் சொல் ஐந்தாம் வேற்றுமை உருபாகும். அவ்வுருபு கடை என்னும் பெயர்ச் சொல்லுடன் சேர்ந்திருக்கிறது.

அது கோபாலனுடைய வீடு. உடைய என்னும் ஆறும் வேற்றுமை உருபு கோபாலன் என்ற பெயர்ச் சொல்லுடன் சேர்ந்திருக்கிறது. அது என்ற மற்றொரு உருபும் இதற்கு உண்டு.

வீட்டில் நாம் வசிக்கிறோம். இல் என்பது ஏழாம் வேற்றுமை உருபு. கண் என்பதும் இதன்மற்றொரு உருபாகும்.

கண்ணா! இங்கே வா. இது எட்டாம் வேற்றுமை யாகும்.

———

## 22. சாலை விதிகள்

| | | |
|---|---|---|
| சாலை | விபத்துக்கள் | அபாயம் |
| இடையில் | மேடைகள் | சட்டென |
| எதிர்ப்புறம் | குறுக்கும் | குறிப்பு |
| பின்பற்றி | நெடுக்கும் | நாற்சந்தி |

கிராமங்களில் சாலைகள் அதிகம் இரா. அங்கே ஜனத்தொகையும் குறைவாயிருக்கும். அதனால் சாலைகளில் அதிகமான போக்கு வரத்து இருக்காது.

நகரங்களில் ஜனத்தொகை அதிகம். உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், வியாபாரஸ்தலங்களில் வேலை பார்ப்பவர்கள் தொழிலாளிகள், மாணவர்கள் முதலானவர் சாலைகளில் போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். வண்டிகள் சாலைகளின் நடுவில் போய்க்கொண்டிருக்க ஜனங்கள் அதன் இரு புறங்களிலும் நடந்து போகிறார்கள். இவ்வாறு செல்லும்போது அவர்களுக்குச் சில வேளைகளில் அபாயங்கள் ஏற்படுகின்றன.

இம்மாதிரி ஏற்படும் விபத்துகளைத் தடுக்க அரசாங்கத்தார் சில சாலை விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அச் சாலை விதிகளை ஒவ்வொருவரும் பின்பற்றி நடந்தால் சாலையில் நேரும் விபத்துக்களைத் தடுக்கலாம்.

பெரிய நகரங்களின் சாலைகளில் இருபுறங்களிலும் மேடைகள் கட்டப்பட்டிருக்கும். அவை ஜனங்கள் நடந்து செல்லுவதற்காகவே ஏற்பட்டவை. நடந்து செல்பவர் அம்மேடையின் மேல் இடது புறமாகச்



செல்லவேண்டும். மேடைகள் இல்லாத இடங்களில் சாலையின் ஓரத்திலேயே செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் பொழுது வலது புறமாகச் செல்வது நலம்.

வீதிகளிலும், தெருக்களிலும் பலர் கூடி நின்று பேசுவதும், சிறுவர்கள் விளையாடுவதும் கூடாது.

சாலைகளையும், சாலை யோரங்களையும் நாம் அசுத்தம் செய்யலாகாது.

ரஸ்தாக்களைக் கடக்கும்பொழுது மிகவும் கவனமாகச் செல்ல வேண்டும். எவ்வளவு அவசரமாகப் போக வேண்டியிருந்தாலும் சற்று நின்று இரு புறங்களையும் பார்த்துக் கவனித்துத்தான் செல்ல வேண்டும். வண்டிகள் சாதாரணமாகச் சாலையின் இடது பாதியில் தான் செல்லும். ஆதலால் முதலில் வலது புறம் பார்க்க வேண்டும். வண்டிகள்



இல்லையேல் வேகமாய் நடந்து சென்று பாதையின் நடுவிடத்தில் நின்று இடதுபுறம் பார்க்கவேண்டும். அந்த பக்கத்திலிருந்து வரும் வண்டிகள் சமீபத்தில் வரவில்லை யானால் வேகமாய் நடந்து சென்று எதிர்ப் பக்கத்தை அடையவேண்டும். போக்குவரவு மிகுதியாக நடைபெறும் நாற் சந்திகளில்

போலீஸ்காரர் நின்று கொண்டிருப்பார். அவர் செய்யும் கைச் சாடையையும், இராக் காலங்களில் விளக்கின் நிறக் குறிப்பையும் அறிந்து செல்ல வேண்டும். மேலே சொல் லப்பட்டவைகளைக் கவனித்து நாம் சாலை களில் நடப்போமாகில் விபத்துக்கள் ஏற் படாமல் தடுக்கலாம்.

### கேள்விகள்

1. சாலைகளில் நடக்கும்போது கடைப்பிடிக்க வேண் டிய விதிகள் யாவை?

2. சாலையைக் குறுக்காகக் கடக்கும்போழுது நாம் எவ்வாறு கவனமாய் இருக்கவேண்டும்?

### பயிற்சி

1. கீழ்க்காணும் பதங்களை உபயோகித்து வாக்கியங் கள் அமை.

விபத்து, சிலவேளை, பின்பற்றி, ஏற்படுத்தி.

### இலக்கணம்

1. படித்த பையன் தேறினன். இவ்வாக்கியத்தில் படித்த, தேறினன் என இரண்டு வினைச் சொற்கள் இருக்கின்றன. தேறினன் என்ற வினைச் சொல்லின் பொருள் முடிந்து விட்டது. இவ்வாறு வினை முடிந்த வினைச் சொற்களுக்கு வினை முற்று என்று பெயர்.

படித்த என்பதும் வினைச் சொல்லே. ஆனல் படித்த என்னும் வினைச் சொல் பொருள் முற்றுப் பெருத வினைச் சொல். இதன் பொருள் பையன் என்னும் பெயர்சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இது பெயரெச்சம் என்று சொல்லப்படும்.

வினையெச்சம் என்பது வினைச் சொல்லைக் கொண்டு முடியும். பையன் படித்துத் தேறினன் என்ற வாக்கியத்தைக் கவனி. 'படித்து' என்னும் வினைச் சொல் 'தேறினன்' என்ற வினைச் சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆதலால் இதற்கு வினை யெச்சம் என்று பெயர்.



## 23, சிங்கம் பேசுகிறது!

| | | |
|---|---|---|
| மிருகேந்திரன் | பிரகாசமாக | மாமிசபட்சிணி |
| இனத்தார் | பிடரிமயிர் | இயல்பு |
| மலைக்குகை | ஆண்மை | சஞ்சரிக்கும் |
| அடவி | கூர்மை | வழக்குமொழி |
| சொப்பனம் | பண்பு | வேண்டுகோள் |

மாணவர்களே! உங்களில் பலர் என்னைப் பார்த்திருக்க மாட்டீர்கள். என் பெயரைக் கேட்டவுடனே நீங்கள் அஞ்சி நடுங்குவீர்கள். நான் யார் தெரியுமா? நான் தான் சிங்கம். நான் வனத்திலுள்ள மிருகங்களுக்கெல்லாம் அரசன். ஆகையால் என்னை மிருகேந்திரன் என்றும் அழைப்பார்கள்.

என் இனத்தாரில் பெரும்பாலோர் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள அடர்ந்த அடவிகளிலும், மலைக் குகைகளிலும் வசிக்கிறார்கள்.

வட இந்தியாவிலுள்ள காடுகளிலும் எங்கள் வமிசத்தாரைக் காணலாம்.

நான் சுமார் எட்டு அடி நீளமும் நான் கடி உயரமும் உள்ளவன். என் நிறத்தைக் கபிலம் என்று சொல்லுவார்கள். என் தலை பெரியதாக விருக்கிறது. என் கண்களோ மிகப் பிரகாசமாக விருக்கின்றன.

எனக்குப் பிடரி மயிர் இருக்கிறது. பிடரி மயிர் என்றால் உங்களுக்குத் தெரியுமா? சொல்லுகிறேன், கேளுங்கள். என்னை நன்றாக உற்றுப் பாருங்கள்; என் தலை யுச்சியிலிருந்து கழுத்து வரை நீண்ட மயிர் அடர்ந்து வளர்ந்து தொங்குகிறதைக் கவனியுங்கள். இதைத் தான் பிடரி மயிர் என்று சொல்லு கிறார்கள்.

நான் ஆண் சிங்கமாகையால் எனக்குப் பிடரி மயிர் இருக்கிறது. எனது மனைவியான பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் கிடை யாது.

என் பற்கள் மிக வலிமையுடையவை. என் கால்கள் மிகுந்த பலம் பொருந்தியவை. என் பாதங்களில் நீண்டு வளைந்த கூர்மை யான நகங்கள் இருக்கின்றன. அவைகளை நான் வேண்டும் பொழுது வெளியே நீட்ட வும், உள்ளே இழுத்துக் கொள்ளவும் செய்

வேன். நான், எவ்வளவு பெரிய மிருகமாக இருந்தாலும் ஒரே அறையில் அதைக் கீழே வீழ்த்திக் கொன்று விடுவேன். அவ்வளவு ஆற்றல் எனக்கு உண்டு.

நான் ஒரு மாமிச பட்சிணி; காட்டில் உலவும் மிருகங்களைக் கொன்று தின்னும் இயல்புடையவன். நான் பகலில் உறங்கி இரவில் இரை தேடுவேன். இரை கிடைக்காத சமயங்களில் நான் கர்ஜனை புரிவேன். என் கர்ஜனை இடி முழக்கம் போலிருக்கும். ஆதலால் அச்சமயம் காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் பயந்து, நாற்பக்கமும் சிதறி ஓட ஆரம்பிக்கும். அப்பொழுது எனக்கு எதிர்ப்படும் பிராணியைக் கொன்று தின்று, என் பசியைத் தீர்த்துக் கொள்வேன்.

காட்டில் வாழும் பிராணிகளில் யானை மிகப் பெரியது என்று உங்களுக்குத் தெரியும். அந்த யானையே என்னைக் கனவில் கண்டால் கூட உயிரை விட்டு விடும். அதனால் தான் "சிம்மசொப்பனம்" என்ற வழக்குமொழி உங்களிடையே வழங்கி வருகிறது.

குழந்தைகளே, என்னை ஒரு கொடியவன் என்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள். என்னிடத்தில் பல தீய குணங்கள் இருக்க

கலாம். ஆனாலும் என்னிடம் சில நற்குண ங்களும் இருக்கின்றன. சாந்தம், பெருந் தன்மை, நன்றியறிவு, இரக்கம் முதலிய நற்பண்புகள் என்னிடத்தில் உண்டு என் பதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். பசி யற்ற வேளையில் ஒரு பிராணியையும் நான் கொல்ல மாட்டேன்.

மிக்க ஆண்மையும் பலமும் உள்ள ஒரு மனிதனை ஆண் சிங்கம் என்று நீங்கள் பெருமையாகச் சொல்வதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இவ்வளவு வீரமும், பல மும் உள்ள நான் உங்களைப் போன்ற மனி தர்களால் சில சமயங்களில் அடக்கியாளப் படுகிறேன் என்பது உண்மையே. மனிதர் கள் எங்களைத் தந்திரமாகப் பிடித்துச் "சர்க் கஸில்" பலவித வேடிக்கைகளைக் காட்டி உங்களை மகிழச்செய்கிறார்கள்.

எனக்கு நேரமாகிவிட்டது. நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். மிரு கேந்திரன் என்ற முறையில் நான் உங்களை ஒன்று வேண்டிக் கொள்கிறேன். என்னைப் போன்ற விலங்கினங்கள் உங்களுக்குப் பல விதங்களில் உதவி புரிகின்றன. அவைகளை அடித்துத் துன்புறுத்தாது அன்பாயிருங் கள்! இதுவே என் வேண்டுகோள்.

### கேள்விகள்

1. ஆண் சிங்கத்திற்கும், பெண் சிங்கத்திற்கும் என்ன வித்தியாசம்?
2. 'சிம்ம சொப்பனம்' என்ற வழக்கு மொழி ஏற்படக் காரணம் என்ன?
3. சிங்கத்தினிடமுள்ள நற்குணங்கள் யாவை?
4. சிங்கம், உங்களை என்ன வேண்டிக் கொள்கிறது?

### பயிற்சி

1. ஒரு பசு தன் கதையைச் சொல்லுவது போல நீ எழுது.
2. பின் வரும் சொற்களில் ஒன்றுக் கொன்றுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்.

   இரை-இறை; கரி-கறி, ஒலி-ஒளி, இறக்கம்-இரக்கம்; புலி-புளி.

### இலக்கணம்

(1) சிங்கத்தின் கர்ஜனை இடி முழக்கம் போல இருக்கும்.

(2) இராமனும் கிருஷ்ணனும் உறவினர்கள்.

இரண்டு வாக்கியங்களிலும் உள்ள சொற்களைக் கவனி. உம், போல, இவை யிரண்டும் ஒரு சொல்லைச் சார்ந்து வருகின்றன. ஒரு சொல்லைச் சார்ந்து வரும் எழுத்துக்களுக்குஇடைச் சொற்கள்எனப் பெயர். வேற்றுமை உருபுகளும் அம்மாதிரி சார்ந்து வருவதால் அவைகளும் இடைச் சொற்களே.

சாலப் பேசினான். கடி மலர்.

சால, கடி, இவை யிரண்டும் உரிச்சொற்கள் எனப்படும். பெயர்ச் சொற்களையோ. வினைச் சொற்களையோ அடுத்து அதற்குரிய குணத்தை உணர்த்தும் சொற்களுக்கு உரிச் சொற்கள் எனப் பெயர் வரும்.

## 24. பழமொழிகள்.

1. அரசு அன்றுகொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்.
2. ஆசை இருக்கிறது அரசாள, திற மை இருக்கிறது கழுதை மேய்க்க.
3. இளங்கன்று பயமறியாது.
4. ஈக்கு விஷம் தலையில், தேளுக்கு விஷம் கொடுக்கில்!
5. உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?
6. ஊணுக்கு முந்துவான், வேலைக்குப் பிந்துவான்.
7. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
8. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?
9. ஐம்பது வந்தாலும் அவசரம் ஆகாது.
10. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
11. ஓட்டைச் சட்டி யானாலும் கொழுக் கட்டை வெந்தால் சரி.
12. ஔவை சொல்லுக்கு மாற்று இல்லை.

# 26. வீர சிவாஜி

## (நாடகம்)

### காட்சி I

இடம் :— ஔரங்கசீப்பின் ஆலோசனை மண்டபம்.

காலம் :—காலை.

பாத்திரங்கள் :— ஔரங்கசீப், முதல் மந்திரி, 2-ம் மந்திரி, பிரதானி, சேவகர்.



**ஔரங்கசீப்** .— மந்திரிகளே, பிரதானியே, நம் எதிரியாகிய சிவாஜியை அடக்க நம்மால் முடியவில்லை. அவன் நமக்கு இழைக்கும் தீங்கு சொல்லும் தரமன்று.

**முதல் மந்திரி:**—சக்கரவர்த்தி, நம் சேனையிலுள்ள மிகச்சிறந்த ஒருவரின் தலைமையில் ஒரு சேனையை அனுப்பினால்,

சிவாஜியையும், மகாராஷ்டிரர்களேயும் ஒரு நொடியில் அடக்கிவிடலாம்.

**இரண்டாம் மந்திரி:**—முதல் மந்திரியார் சொல்லுவது நடக்காத காரியம், எனக்கு ஒரு யோசனே தோன்றுகிறது. பாதுஷா அனுமதித்தால் அதை வெளியிடுகிறேன்.

**ஔரங்கசீப்:**—என்ன யோசனே அது? விரைவில் சொல்லும்.

**இரண்டாம் மந்திரி :**—முள்ளே முள்ளால்தான் கீறி எடுக்கவேண்டும். தந்திரக்காரனே நாம் தந்திரத்தால்தான் வெல்ல வேண்டும். ஆகையால் அவனேத் தந்திரமாக நம் தலே நகருக்கு வர வழைத்துச்சிறையிலடைக்கவேண்டும். இதுவே என் யோசனே.

**ஔரங்கசீப் :**—நன்ருகச் சொன்னீர்! நீர்சொல்லும் யோசனே கொக்கின் தலேயில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது போல்அல்லவா இருக்கிறது? சிவாஜி, நாம் அழைத்தால் வருவானு?

**இரண்டாம் மந்திரி.**—பாதுஷாவே! மன்னிக்கவும். நான் சொல்லுவதைச் சற்றுப் பொறுமையுடன் கேட்கும்படிவேண்டிக்

14708

கொள்கிறேன். சிவாஜியின் வீரத்தை மெச்சித் தாங்கள் அவனைக் காண விரும்புவதாகச் செய்தி சொல்லி அனுப்ப வேண்டும். அவன் இச் செய்தியை உண்மையென நம்பி டில்லிக்கு வருவான். அவன் இங்கு வந்ததும் அவனைப் பிடித்துச் சிறையி லடைக்க வேண்டும்.

ஔரங்கசீப்— அச்சா! நல்ல யோசனை! இப்பொழுதே ஒரு தூதனை அனுப்பு.

(காட்சி முடிவு,

## காட்சி 2)

இடம்:-ஔரங்கசீப்பின் கொலு மண்டபம்.
காலம்:-காலை.

பாத்திரங்கள்:-ஔரங்கசீப், மந்திரிகள், பிரதானி, சேவகர்கள்.

சேவகன்:—பாதுஷாவே! (வணங்குகிறான்.)

ஔரங்கசீப்:—என்ன? என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்?

சேவகன்:—சிவாஜியும் அவரது குமாரரும் வந் திருக்கிறார்கள். பாதுஷாவைக் காண வேண்டுமாம்.

ஔரங்கசீப்:—வரச்சொல்.
( மந்திரியைப் பார்த்து)மந்திரியாரே!உமது யோசனை பலித்து விட்டதே. பிரதானி யாரே! தயாராயிரும். ஜாக்கிரதை.

பிரதானி:—மகாராஜ் ! தயாராக விருக்கிறேன்.
(சிவாஜியும் சம்பாஜியும் நுழைகிறார்கள்.)

சிவாஜி:—பாதுஷாவே! வணக்கம். தங்களை நேரில் காண நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

ஔரங்கசீப்: — ஆம் ! மகிழ்ச்சியடையுங்கள்! அதோ அந்தப் பின்புறமுள்ள ஆசனத் தில் உட்காருங்கள்.

சிவாஜி:—பாதுஷாவே! என்னை அரசராக ஒப்புக் கொண்டு அழைப்பு அனுப் பினீர்கள். ஆனால் தாங்கள் பின் வரிசை யில் எனக்கு இடம் கொடுப்பதைப் பார்த்தால்......

ஔரங்கசீப்:—தெரியும்,எனக்குஉம்மைப்பற்றி. மலை எலியே ! தெரிந்து தான் உனக்குப் பின்னணியில் ஆசனங்கள் கொடுத் தேன்.

சிவாஜி:—(கோபமாக) தங்கள் பேச்சு மிகவும் ஆச்சரியமாக விருக்கிறது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளும் சக்கரவர்த்தி

யின் வார்த்தைகளா இவை! மலை எலியா நான்? ஆம் ! அந்த மலை எலிக்குப் பயந்து தானே அழைப்பு அனுப்பினீர்கள்.

ஔரங்கசீப்:—என்ன சொன்னாய்? சேனைத் தலைவரே ! இவரைக் கைது செய்யும்.

சிவாஜி:—பாதுஷாவே! நான் தனியாக வந்திருக்கிறேன் என்று நினைத்துப் பயமுறுத்துகிறீர்கள் போலும்! ஒவ்வொரு மகாராஷ்டிர வீரனும் ஓர் ஆண் சிங்கம் என்பதைப் பாதுஷா தெரிந்து கொள்ளட்டும்.

ஔரங்கசீப்:—(பரிகாசமாக) ஆண் சிங்கமே! வாருங்கள்.

சிவாஜி.—அழைப்பின் மேல் வந்த விருந்தினரைக் கைது செய்வது தான், தங்கள் அரசு முறையில் நீதி போலிருக்கிறது.

ஔரங்கசீப்.—(கோபத்துடன்) சேனாதிபதி! இவரைக் கைது செய்து சிறையிலடையுங்கள்.

(சேனைத் தலைவர் எழுந்து சிவாஜியிடம் வருகிறார்.)

சிவாஜி.—பாதுஷாவே ! ஒரே ஒரு வார்த்தை. இதோ தங்கள் எதிரில் நிற்கும் சிவாஜி

அழிய நேரிடலாம். ஆனுல் ஆயிரம் வீர சிவாஜிகள் தோன்றுவர் என்பது மட்டும் நிச்சயம். உடலில் ரத்தம் ஓடும் வரையில் தேசத்திற்காகப் பாடுபடப் பின் வாங்கமாட்டான் மகாராஷ்டிர வீரன். பாதுஷாவே! தங்களின் இந்தச் செய்கை தங்களுக்கு நேரிடும் அழிவுக்கே அறிகுறி!

(சேனைத் தலைவன் சிவாஜியையும் சம்பாஜியையும் சிறைச்சாலைக்கு அழைத்துப் போகிருன்.)

(காட்சி முடிவு)

[சிவாஜி சிறையிலிருந்து தப்ப ஒரு தந்திரத்தைக் கையாளுகிருர். தமக்கு அளிக்கப்படும் பழக்கூடையில் ஒளிந்து, தாமும், சம்பாஜியுமாக சிறையிலிருந்து வெளியேறுகிருர்கள். அவர்கள் மாறுவேஷத்துடன் திரும்பவும் தம் நாட்டை அடைகிருர்கள்.]

## காட்சி 3

இடம்:—ஔரங்கசீப்பின் தனியறை.

காலம்:—மாலை.

பாத்திரங்கள். ஔரங்கசீப், சேவகன்.

[ஔரங்கசீப் தமது மாலைத் தொழுகையை முடிக்கும் சமயம் சேவகன் வருகிருன்.]

**சேவகன்.**—பாதுஷாவே! (வணங்குகிருன்)

**ஔரங்கசீப்.**— என்ன விசேஷம்? இச் சமயத்தில் என்னைக் காண வந்திருக்கிருய்?

**சேவகன்**—பாதுஷாவே! மிகவும் அவசர மான செய்தி.

**ஔரங்கசீப்**—என்ன செய்தி? சீக்கிரம். சொல்.

**சேவகன்:**—(தயங்குகிறுன்) பாதுஷாவே ......!

**ஔரங்கசீப்.**—சொல், ஜல்தி.

**சேவகன்.**—சிவாஜி...சிறையிலிருந்து தப்பி விட்டார்.

**ஔரங்கசீப்.**—தப்பிவிட்டாரா! அப்படியா சமாசாரம்?......சரி, நீபோ.

(ஔரங்கசீப் அங்கும் இங்கும் உலாவிக்கொண்டு தமக்குள் யோசிக்கிறுர். பிறகு தமக்குள் சொல்லிக் கொள்கிறுர்.) "ஆம்" அது ஆண்டவன் செயலே! சிவாஜியை அடக்குவது ஆண்டவனுக்கு ஒப்ப வில்லை போலும். ஆம்!... ஆம்! அதுவே தான்!

என்னுடைய அந்திம காலத்திலாவது சற்று மன நிம்மதியுடனிருக்கலா மென்று நினைத்தேன். முடியவில்லை. என்னுடைய ஆசைகளில் ஒன்று மட்டும் நிறை வேறியது. என்னுடைய பாட்டன் அக்பரை விட என் ராஜ்யம் பெரிதாயிருக்கிறது. ஆனல் அவரைப் போல நான் ஆள முடிய வில்லை... இது யாருடைய குற்றம்?......ஆம்! இது என் னுடைய குற்றமே......"

(ஒரு கடிதத்தை எடுத்து எழுதுகிறுர்)

"எல்லாம் ஆண்டவன் செயல்! சிவாஜியே! உன்னை நான் அவமானப் படுத்தியது ஆண்ட

வனுக்குப் பொறுக்கவில்லை. உன்னுடைய தைரி யத்தை நான் மெச்சுகிறேன். உனக்கு ஆண்டவன் எல்லா நன்மையும் புரிவாராக!" (எழுதி முடித்து) சேவகா!

(சேவகன் வருகிறான்)

ஒளரங்கசீப் :—இந்தக் கடிதத்தைச் சிவாஜி யிடம் கொண்டு போய்க்கொடுத்துவா. போ, ஜல்தி.

சேவகன் போகிறான்

(ஒளரங்கசீப் மறுபடியும் பிரார்த்தனையில் உட் காருகிறார்)

காட்சி முடிவு.

## காட்சி 4

இடம்:—சிவாஜியின் கொலுமண்டபம்.

காலம்:—காலை.

பாத்திரங்கள்:—சிவாஜி, குருதேவர், மற்ற வீரர்கள், பொது மக்கள். சிவாஜியின் தாயார்.

**குருதேவர்.**— ஜய ஜய பவானி! ஜய ஜய பாரதம்! ஜய ஜய மாதா! ஜய ஜய துர்க்கா! வீரர்காள்! இன்றே புனித நாள். இன்றே மகாராஷ்டிரம் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றது.

(முடியைச் சூட்டுகிறார். சிவாஜி எழுந்து நின்று குருதேவரையும், தம் அன்னையையும், சபை யோரையும் வணங்குகிறார்)

**ஜனங்கள்**—சிவாஜி மகாராஜாவுக்கு ஜே! சத்ரபதி சிவாஜிக்கு ஜே!

**சிவாஜி.**—ஜய ஜய பவானி! ஜய ஜய பாரதம்! எனது குரு தேவரே! எனது அன்னையே! பெரியோர்களே! வீரர்களே.! நம் குல தெய்வமாகிய பவானி தேவியின் அருளினால் இன்று நாம் புத்துயிர் பெற்றோம். எனக்கு அளித்த பெருமைக்கும், ஆதரவுக்கும் நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.



நம்முடைய நாட்டின் அடிமைத் தளையை உடைத்தெறிய நீங்கள் அரும் பாடு பட்டீர்கள். தைரியத்தை இழக்காமல்போர் புரிந்தீர்கள். நமது உண்மை நண்பர்களில்பலர்வீர மரணம் எய்தினர். எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படினும் தளராது நமது காரியத்தில் முயற்சி

யுடனிருந்து கடைசியில் வெற்றியையும் அடைந்தோம். இனி நாம் நமது நாட்டைத்திறம்பட நடத்தி, பாரதத்தின் மற்றப் பகுதிகளையும் அடிமைத் தளையி னின்று விடுவிப்போமாக!

(சேவகன் வருகிறான்)

**சேவகன்:**—மகாராஜா! கையில் ஒரு கடிதத்து டன் ஒரு தூதுவன் வந்திருக்கிறான். தங்களை நேரில் பார்க்க வேண்டுமாம்.

**சிவாஜி.**—அவரைத் தக்க மரியாதையுடன் அழைத்து வா.

(சேவகன் தூதுவனை அழைத்து வருகிறான்)

**தூதுவன்.**—மகாராஜாவே! டில்லி பாதுஷா தங்களிடம் நேரில் இக்கடிதத்தை கொடுக்க உத்தர விட்டார்.

(வணங்கிக் கொடுக்கிறான்.)

**சிவாஜி.**—தூதுவரே! டில்லியிலிருந்து வரும் நீர் மிக்க களைப்படைந்ததாகத் தெரிகி றது. அர்ண்மனையில் உணவு அருந்திச் சிறிது களைப்பாறிச்செல்லும்.

**தூதுவன்.**—அப்படியே, மகாராஜ்!

(போகிறான்)

**சிவாஜி :**—(கடிதத்தைப்படித்துவிட்டு)

எனது அன்பார்ந்த தோழர்களே! ஔ ரங்கசீப் பாதுஷா மறுபடியும் கடிதம்

எழுதியிருக்கிறார். தாம் செய்த செய்கைக்கு வருந்துவதாகவும், ஆண்டவன் என்னைக் காப்பாற்றுவா ரென்றும் எழுதியிருக்கிறார். நமக்கு ஒளரங்கசீப் பாதுஷா விடத்திலோ அல்லது முகம்மதியர்களிடத்திலோ வெறுப்புக் கிடையாது. அவர்களையும் நமது சகோதரர்கள் போலப் பாவிக்கவேண்டும். நமது நாட்டில் வாழ்பவர் யாராயிருந்தாலும் நமக்குச் சமமே. எல்லோரும் இன்புற்றிருக்கும் ஒரு நாட்டை அமைப்போம். வருங்காலச்சந்ததிகள் அன்னை பவானியின் அருளால் ஏற்பட்ட மகாராஷ்டிர இராஜ்யத்தைப் புகழட்டும். அதனைப் பின் பற்றட்டும்.

**ஜனங்கள்.**—சத்ரபதி சிவாஜிக்கு ஜே! மகாராஜாவுக்கு ஜே.

காட்சி முடிவு.

சுபம்.

பயிற்சி

இந் நாடகத்தை உங்களது பள்ளியில் நடக்கும் ஆண்டுவிழாவின் போது நடித்துக்காட்டுங்கள்.

---

# செய்யுட் பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

### சரஸ்வதி துதி.

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிவாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட் பொரு ளாவாள்.

—பாரதியார்.

## 2. வெற்றி வேற்கை

### ஆசான்.

1. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.

### அழகு

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னவர்க் கழகு செங்கோண் முறைமை.
4. வணிகர்க் கழகு வளர் பொரு ளீட்டல்.
5. உழவர்க் கழகே ருழு தூண்விரும்பல்.
6. மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்.
7. தந்திரிக் கழகு தறு கணாண்மை.
8. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
9. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

### நட்பு.

1. அடினும் ஆவின் பால் தன் சுவை குன்ருது.
2. சுடினும் செம் பொன் தன் னொளி கெடாது.
3. அரைக்கினும் சந்தனம் தன் மணம் அருது.
4. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
5. கலக்கினும் தண் கடல் சேறு காது.
6. அடினும் பால் பெய்து கைப்பறு து பேய்ச் சுரைக்காய்.
7. ஊட்டினும் பல் விரை உள்ளி கமழாது.

### பெரியோர் நட்பு

1. ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க் கும்மே.

### மூர்க்கர் நட்பு

1. நூற்றாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க் கொள்ளாதே.

### கல்வியின் உயர்வு

1. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

## 3. வாக்குண்டாம்

### நல்லார்க்குச் செய்த உபகாரம் பலன் தரும்

1. நன்றி யொருவருக்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

### நல்லார் நட்பு

2. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே; நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே: அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் நன்று.

### தீயார் நட்பு

3. தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே; தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது.

### கல்லாதவன்

4. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்; சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

### கல்லாதவன் கவித்தன்மை

5. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச்சிறகைவிரித்(து)ஆடினாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி.

## குறிப்புரை

### சரஸ்வதி துதி.

இப் பாட்டை இயற்றியவர் கவிச் சக்கரவர்த்தி சுப்பிர மணிய பாரதியார். இவர் சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்தவர். இவர் பிறப்பிடம் எட்டையபுரம்.

இன்பம் குலவு கவிதை - இன்பம் நிறைந்த பாடல்.

### வெற்றி வேற்கை

இந் நூலை இயற்றியவர் அதிவீர ராம பாண்டியர். இவர் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்பு வசித்தவர். இவர் தென் காசியில் அரசாண்டு வந்தார்.

கசடு அற - குற்றம் நீங்க. கிளை—உறவினர். செங் கோல் - நீதியுடன் அரசாளுவது. வரும்பொருள் - வரப் போகும் காரியங்கள். தந்திரி - சேனைத் தலைவர். தறு கண் - போரில் புறங்காட்டாத. ஆண்மை - வீரம். ஈட்டல்- தேடுதல். வறியோர் - தரித்திரர். வறுமை - ஏழைமை. செம்மை - நல்லொழுக்கம் கெடாது நிற்பது.

இறைவன் – ஆண்டவன். கற்கை - படித்தல். பிச்சை புகினும் - பிச்சை எடுக்க நேரினும். குல நலம்.—குலத்தின் பெருமை. பதர் - பயிரில் ஏற்படும் சாவி.

சுவை - ருசி. ஒளி - பிரகாசம். அருது - குறைவேற் படாது. கார் - கருமை நிறமான. அகில் - ஒரு விதக் கட்டை. பொல்லாங்கு - கெட்ட வாசனை. கமழாது - வீசாது. தண் - குளிமையான. கைப்பு - கசப்பு. விரை - வாசனை. இரு நிலம் - பெரிய பூமி. கேண்மை - சிநேகம். நீர்க்குள்-தண்ணீரிலுள்ள, மூர்க்கர்-துஷ்டர். கொள்ளாது- ஊன்றாது.

### வாக்குண்டாம்.

இந்நூலை அருளிச் செய்தவர் ஔவையார். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர் ஆவார். இவர்

ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

1. நின்று - நிலை பெற்று. தளரா - தளராமல். தெங்கு - தென்னைமரம். நீரை - வேறு நீரினை. தலையாலே- தனது முடியினாலே. தரும் கொல் என — (அவன், நமக்குச் செய்வானோ வென்று. வேண்டா - சந்தேகிக்க வேண்டியதில்லை.

2. காண்பதும் - தரிசிப்பதும். கேட்பதும். - காதுகளினால் கேட்பதும். உரைப்பதும் - புகழ்ந்து பேசுவதும் இணங்கி - நட்புக்கொண்டு.

3. திரு அற்ற - மேன்மையில்லாத. சொல் - தீச் சொற்களை. தீதே - தீமையாம்.

4. கவையாகி - கிளைகளையுடையனவாகியும். கொம்பாகி - கொம்புகளை உடையவையாகியும். காட்டு அகத்தே - காட்டின் கண்ணே நிலை பெற்று; நீட்டு ஓலை - படியென்று கொடுத்த ஓலையை; குறிப்பு - அவ்வோலையின் கருத்தை. அறியமாட்டாதவன் - அறியத் திறமையில்லாதவன். நல்ல மரம் - நல்ல மரமாவான்.

5. கல்லாதான் - கற்காதவன். கானம் - காட்டில். பொல்லா - அழகில்லாத.

ஆவணக்காப்பக
47078
சென்னை-600 008
TB
031(4)
N49

# ARAMBAK KALVI

**TAMIL**

**FOURTH READER.**

BY
Vidwan. V. LAKSHMANAN
AND
N. S. NATESAN

**Sri SHANMUKA PUBLISHING HOUSE**
**MANNARGUDI**